SOUND 86 A/L
திரு. சத்தியசீலன்
ஆரம்பம்:
31 – 03 – 86
திங்கள் காலை: 7-15
திங்கள் வெள்ளி: 7-15 8-15
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

சஞ்சீவி
அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி
விலை ரூ.2/-

87 A/L
HEAT
திரு. வர்ணம்
ஆரம்பம்:
5 – 4 – 86
சனி, ஞாயிறு: 11-30–12-30
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹூ பங்குனி மீ 16 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 17 (29-03-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 10

## கருத்துக் கலசம்

மனித உடல் விசித்திரமானது. உயிர் உள்ளவரை அது தெம்புடன் இயங்கும். ஓய்வு ஒழிச்சல் இன்றி உழைக்கவும் செய்யும். அளவுக்கு அதிகமாக செயற்படவும் தயங்காது.

ஆனால் அதில் சிறு கோளாறு ஏற்பட்டு விட்டால் போதும். அது படுத்துவிடும் அப்படி ஒரு நிலைமை ஏற்படாமல் அது சீராக, ஒழுங்காக இயங்குவதற்கு அதற்கு குறிப்பிட்ட அளவு ஓய்வு தேவை.

அந்த ஓய்வில் நித்திரை போக மிகுதி நேரத்தைப் பொழுது போக்கில் கழிப்பது மனித வழக்கமாகி விட்டது. அந்தப் பொழுதுபோக்கு நேரத்தில் உதித்தவையே கலைகள், விளையாட்டுக்கள் எல்லாம்.

ஆதிகாலத்தில் வேறு உருவங்களில் இருந்த கலைகள் இப்போது வெவ்வேறு வடிவங்களை எடுத்துள்ளன. பொழுதுபோக்கு சாதனங்களும் விஞ்ஞான வளர்ச்சியுடன் நவீனமயமாகி விட்டன.

நவீன பொழுது போக்கு சாதனங்களில் தொலைக்காட்சி இப்போது பிரதான இடம் வகிக்கிறது. வீட்டில் இருந்தவாறே அகில உலகத்தையும், அங்கு நடக்கும் நிகழ்வுகளையும் பார்த்தும் கேட்டும் அறிய அது வகை செய்கிறது.

தொலைக்காட்சி பொழுது போக்குச் சாதனம் மட்டுமன்று. அது பூமியின் எட்டுத் திக்கிலும் நடக்கும் விவகாரங்களை விரைவாக எடுத்துக் காட்டும் சிறந்த தகவல் சாதனமும் ஆகும். அத்தோடு அது கல்விப் போதனைச் சாதனமும் ஆகும்.

எந்த விவகாரத்திலும் நன்மையோடு தீமையும் சேர்ந்து இருக்கும். அதுபோலவே முத்தொழில் சிறப்புமிக்க தொலைக்காட்சிக்கும் "அடுத்த பக்கம்" இருக்கிறது.

தொலைக்காட்சியைப் பொறுத்த வரையில் எம்மவரிடம் பன்றுடைப் புத்தி இருப்பதைக் காண்கிறோம். நல்லதை உதறித் தள்ளி விட்டு கெட்டதை உள்ளெடுக்கும் உளப்போக்கு மலிந்து விட்டதா? அல்லது வருமானத்துக்காக கெட்டவை திணிக்கப் படுகின்றனவா?

தொலைக்காட்சி "டெலிக்காட்சி"யாக குறுகி, சமுதாயத்துக்கு குந்தகத்தை விளைவித்து வருகிறது. குறிப்பாக மாணவர் சமுதாயத்தின் கல்வி நேரத்தைப் பாழடிக்கிறது. எதிர்கால சந்ததியின் நன்மை கருதி 'டெலிக் காட்' விஷயத்தில் நாமே நமக்குக் கட்டுப்பாடு விதித்துக் கொள்வது அவசியம்.

திரைப்பட சாலைகள் இப்போது ஓய்ந்து விட்டன. அவை இரவும் பகலும் சயனிக்கின்றன மினி தியேட்டர்களே இப்போது மலிந்து விட்டன. அவற்றில் பல மினிகள்

(8 ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் "கடும் போக்கு":

# இனப் பிரச்சினை குறித்து அமைச்சரவை ஆய்வு

## நீண்ட இடைவெளிக்குப் பின்

கொழும்பு மார்ச் 29

நீண்ட இடைவெளியின் பின்னர், இனப்பிரச்சினை சம்பந்தமாக, கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டதாக மிகவும் நம்பிக்கையாக அறியவந்துள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா எடுத்துள்ள "கடும் போக்கு" குறித்தும் அமைச்சரவை ஆராய்ந்ததாகத் தெரியவந்துள்ளது.

கடந்த புதன் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நீண்ட காலத்திற்குப் பின், இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒன்றரை மணித்தியாலங்கள் வரை ஆராயப்பட்டதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன

திட்டவட்டமான யோசனைகளுடன் இறுதிப் பேச்சுக்குத் தயாராக வந்தால் தான் திரு. டண்டாரியை அனுப்புவேன் என்று இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி வலியுறுத்தி உள்ளதைத் தொடர்ந்தே அமைச்சர்கள் தீவிர கவனஞ் செலுத்தத் தொடங்கியுள்ளனராம்.

வடக்கு - கிழக்கு இணைப்புப் பற்றியும் அமைச்சர்கள் பரிசீலனை செய்தனராம்.

இதனிடையில், கிழக்கு மாகாணத்தில் முதலில் மாகாணசபைத் தேர்தல் என்று அரசு வட்டாரங்கள் கூறும் செய்தி வெறும் பேச்சுத்தான் என்று கொழும்பு அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள பிரமுகர்கள் மத்தியில் இந்த யோசனைக்கு எந்தளவுக்கு ஆதரவு உள்ளது என்று நாடி பிடித்துப் பார்ப்பதற்கே இந்த யோசனையை அரசு வட்டாரங்கள் முன் வைத்தது என்றும் "ஒரு பீலராக" அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

## ஹெலிக்கொப்டரிலிருந்து சுடுவது வானத் தாக்குதல் இல்லையாம்!

### லலித்தின் புது வியாக்கியானம்

கொழும்பு, மார்ச் 29

ஹெலிக்கொப்டர் தாக்குதல்-வானத் தாக்குதல் இல்லை. இப்படிச் சொன்னார் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி.

தெல்லிப்பளையில் இடம் பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் ஒருவர் மரணம்; மூவர் காயம் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டது.

அச் செய்திக்கு மறுப்புத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்ட வியாக்கியானத்தை வெளியிட்டார்.

ஹெலிக்கொப்டரில் இருந்து சுடுவதை வானத் தாக்குதல் என்று எடுக்க முடியாது ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடைபெறுவது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

தெல்லிப்பளையில் அன்று போராளிக் குழு ஒன்றின் மீது தான் ஹெலிக்கொப்டரில் இருந்து சுடப்பட்டது.

இப்படி அமைச்சர் சொன்னதாக அந்த ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டது.

## காரைதீவை சுற்றி வளைத்து 350 இளைஞர் கைது

கல்முனை, மார்ச் 29

காரைதீவுக் கிராமம் நேற்று அதிகாலை பொலீஸ் கமாண்டோக்களால் சுற்றி வளைக்கப் பட்டது.

தேடுதலின் பின்னர் சுமார் 350 தமிழ் இளைஞர்களை விசாரணைக்காக களுவாஞ்சிக்குடி அதிரடிப்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

சுமார் 15 ட்ரக்குகளில் வந்த அதிரடிப் படையினர் திடீரென்று கிராமத்தைச் சுற்றி வளைத்தனர்.

கதவுகளைத் தட்டி, நித்திரையில் இருந்த இளைஞர்களை வெளியில் வரும் படி அழைத்தனர் அதிரடிப் படையினர்.

சகல இளைஞர்களும் 2 தனியார் லொறிகள், ஒரு வான், ஒரு ட்ரக் ஆகிய

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் ஆஸ்பத்திரி ஸ்தம்பித நிலையில்

### டாக்டர்கள் வேலைநிறுத்தம்

நல்லூர், மார்ச் 29

யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் நேற்று திடீர் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் பிரபல வைத்தியநிபுணர் ஒருவரின் காரொன்று நேற்று அதிகாலை ஆயுதந்தாங்கிய இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கடத்திச்செல்லப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாகவே இவ்வேலைநிறுத்தம் நடந்தது.

டாக்டர்களின் வேலைநிறுத்தத்தால் அவசர சிகிச்சைகள் தவிர ஏனைய

(8ஆம் பக்கம் பார்க்க)

# கன்னியாவில் கண்ணிவெடி!

## கவச வாகனம் சிதறியது ஐந்து சிப்பாய்கள் பலி

— திருமலை மாவட்டச் செய்தியாளர் —

திருகோணமலை, மார்ச் 29

கன்னியாவில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து சிப்பாய்கள் மரணமானார்கள். மூன்று சிப்பாய்கள் படுகாயம் அடைந்தார்கள்.

நேற்றுக்காலை 9. 30 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

படுகாயம் அடைந்த சிப்பாய்கள் ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப் பட்டனர்.

இச்சம்பவம் பற்றிய விவரம் வருமாறு;

வில்கம் விகாரை இராணுவ முகாமில் இருக்கும் சிப்பாய்கள் கவசவாகனம் ஒன்றில் பொருள்கள் வாங்குவதற்காக திருகோணமலை வந்து கொண்டு இருந்தனர்.

வழமை போன்று, சில

(8ஆம் பக்கம் பார்க்க)

**சுபநேரம்**

29- 3- 1986

சனிக்கிழமை

சுபநேரம்:
3 13 முதல் 4.43 வரை

ராகுகாலம்:
9.13 முதல் 10 43வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## பண்டாரி லீவில்

புதுடில்லி, மார்ச் 28

இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இயக்கம் உரிமை கோருகிறது

சென்னை, மார்ச் 28

கன்னியாவில் கடந்த வெள்ளிக்கிழமை (28 3 86) காலை இடம் பெற்ற கண்ணிவெடித் தாக்குதலுக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

இது சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது;

இக் கண்ணிவெடித் தாக்குதலில் 9 சிப்பாய்கள் பலியாகினர். 8 சிப்பாய்கள் காயமடைந்தனர்.

வில்கம் விகாரை இரா

(8 ஆம் பக்கம் பார்க்க)



அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் — அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; — தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?
— மகாகவி பாரதியார் —

சிறு தணலும் வீரம் மிக்கது வீரத்திற்கு குஞ்சென்றும் மூப்பென்றும் கிடையாது என்கிறார் பாரதியார்.

சிறு தணலாய் மூட்டப்படுவது பெரும் காட்டையே எரித்து நாசமாக்கி விடுகிறது.

அநீதியைச் சுட்டெரிக்கும் வீரச் சுடராக அக்கினியைக் கொள்வர். அது சம்ஹாரத்தைக் குறிப்பது.

ஈழத்திலே தமிழர் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அநீதிகளுக்கு எதிராக கடந்த வியாழனன்று தீ மூட்டப்பட்டது

யாழ்நகரில் முதற்தடவையாக நடத்தப்பட்ட தீவட்டிப் பேரணியின்போது எடுக்கப்பட்ட படத்தையே மேலே காண்கிறீர்கள்.

(படம்: லிங்கன்)

## வாவியில் தோணி கவிழ்ந்து 8 பேர் நீரில் மூழ்கி மரணம்

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்

-:மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர்:-

மட்டக்களப்பு, மார்ச் 29

தாய், மகள், மருமகள், பேரன், பேத்தி எல்லாமாக எட்டுப்பேர் தோணி கவிழ்ந்ததால் நீருள் மூழ்கி மரணமானார்கள்.

மட்டக்களப்பு வாவியில் இப்பரிதாப சம்பவம் கடந்த வியாழன் காலை நடந்தது.

எட்டுப்பேரின் சடலங்களில் ஏழுபேரின் சடலங்கள் நேற்று (வெள்ளி) பிற்பகல் மீட்கப்பட்டன.

மட்டக்களப்பு வாவியில் பிள்ளையாரடிக்கும் நரிப்புல் தோட்டத்துக்கும் இடையில் இவ்விபத்து இடம்பெற்றது.

இறந்தவர்களின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டிலும் தரை மார்க்க ரோந்து தொடங்குமா?

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, மார்ச் 29

யாழ் குடா நாட்டிலும் தரை மார்க்கமான ராணுவ ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க ஆயுதப்படை தயார் படுத்தப்பட்டு வருகின்றதா?

தற்போது வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை பகுதிகளில் தரை மார்க்கமான ராணுவ ரோந்து நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

குடா நாட்டில் அதுபோன்று ரோந்து நடத்த முடியாத நிலையில் ஆயுதப்படையினர் உள்ளனர்.

இது ஆயுதப்படையினர் மத்தியில் ஒரு சவாலாக கருதப்படுகின்றது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் மீண்டும் தரை மார்க்கமான ரோந்து நடவடிக்கைகளை மேற் கொள்ளக்கூடியவிதத்தில் ஆயுதப்படையினரைத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவார காலம் அனாதரவான நிலையில் சடலம்

பருத்தித்துறை மார்ச் 29

கடந்த 23ஆம் திகதி பருத்தித்துறை இராணுவ பொலீஸ் கூட்டு முகாமிலிருந்து சுமார் 200 யார் தொலைவில் வைத்து துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இறந்த பெண்மணியான தம்பசெட்டியைச் சேர்ந்த நாகம்மாவின் சடலம் நேற்றுவரை அகற்றப்படவில்லை.

ஒருவார காலமாக இச்சடலம் அந்த இடத்திலேயே கிடக்கின்றது

அனாதரவான நிலையில் உள்ள இச்சடலத்தை காகங்களும் மற்றும் மிருகங்களும் சேதப்படுத்துகின்றன. துர்நாற்றம் வீசி அழுகிய நிலையில் சடலம் இருக்கிறது.

## கட்டுவனில் இரு வீடுகள் சேதம்

காங்கேசன்துறை, மார்ச் 29

பலாலி விமான நிலைய சுற்றுடல் பகுதியில் அமைந்துள்ள கட்டுவன் மாவடி வைரவர் ஆலயப் பகுதிக்கு நடைபவனியாக வந்த இராணுவத்தினர் இரு வீடுகளை சேதப் படுத்தியதாகப் புகார் கூறப்படுகிறது.

## வீட்டிற்குள் புகுந்து சுட்டுக் கொலை செய்தனர்

### அரச ஊழியருக்கு நேர்ந்த கதி

பலாலி, மார்ச் 29

தமது வீட்டிற்குள் நித்திரை செய்து கொண்டிருந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஒருவர் சீருடை தரித்த ஒரு கோஷ்டியினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவம் பலாலியில், விமான நிலையத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிப்பாய்கள் அனுராதபுரத்தில் நடத்திய நாடகம்!

கொழும்பு, மார்ச் 29

அனுராதபுரம் பகுதியில் ஒரு நாடகம்!

சிராவஸ்திபுர பகுதியில் கடந்த புதன் கிழமை மாலை.

திடீரென்று ஒரு வான் வந்து நின்றது. சாதாரண உடையில் வந்த சில இளைஞர்கள் கைகளில் கிறனேட்டுக்களுடன் துள்ளி இறங்கினர்.

அவ்வளவுதான். அங்கு நின்ற சனங்கள் குய்யோமுறையோ என்று அலறிக்கொண்டு ஓடினர்.

கிறனேட்டுக்களுடன் இறங்கிய இளைஞர் "நாங்கள் சிப்பாய்கள். பயப்படாதீர்கள். பின்னால் ஒரு வான் வரும். அதிலும் சிப்பாய்கள் வருவர். அவர்களோடு மோதுவதுபோல நடிப்போம். பயந்துவிடாதீர்கள்"— என்று பயந்தோடியவர்களை அழைத்துச் சொன்னார்களாம்.

தீவிரவாதிகள் வந்தால் எப்படி மோதுவது என்ற ஒத்திகைதான் இது என்றும் சொன்னார்களாம்.

ஒத்திகைக்கே இந்தப் பயம் என்றால் ......

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தால் பெற்ற இறைமை

## சிங்களவருக்கும் தமிழருக்கும் பொதுவானது

### ஆனால் அது தமிழருக்கு எதிராகப் பாவிப்பு

[காங்கேசன் துறைத் தொகுதியில் 1976 இல் இடைத் தேர்தல் நடந்தது.

அத்தேர்தலில் தந்தை செல்வா மகத்தான வெற்றியைப் பெற்ருர்.

தேர்தல் தீர்ப்பை சுதந்திர தமிழ் ஈழம் அமைக்கும் ஆணையாக தந்தை செல்வா எடுத்துக் கொண்டார்.

அது மட்டும் அல்ல தந்தை செல்வா பங்கு பற்றிய கடைசித் தேர்தலாகவும் அது அமைந்து விட்டது.

அத்தேர்தல் தீர்ப்பைப் பெற்றுக் கொண்ட பின்னர் தந்தை செல்வா ஆற்றிய உரை இங்கு பிரசுரமாகிறது.]

1972 இல் புதிதாக உருவாக்கப்பட்ட இலங்கை அரசமைப்புச் சட்டம் தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியது அல்ல.

தமிழர் மீது இந்த அரசமைப்புத் திட்டம் திணிக்கப்பட்டது.

இந்த நாட்டு மக்களுக்கும் உலக நாடுகளுக்கும் எடுத்துக் காட்டவே காங்கேசன் துறைத் தொகுதியில் இடைத் தேர்தல் ஒன்றை உருவாக்கினேன் பல்லாண்டுகளாக தமிழரும் சிங்களவரும் தனித்தனி இறைமை பொருந்திய மக்களாக இந்த நாட்டில் வாழ்ந்து வந்தனர்.

வெளிநாட்டு ஆதிக்கத்தின் கீழ் வரும்வரை இரண்டு இனங்களும் தனித்தனி இறைமை பொருந்திய இனங்களாகவே இருந்து வந்தனர்.

இழந்த தங்கள் சுதந்திரம் மீண்டும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் தமிழ் மக்கள் நாடு சுதந்திரம் பெற முன்னணியில் நின்று பாடுபட்டனர்.

ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள மக்களுடன் சமத்துவமாக அரசியல் உரிமைகளைப் பெற்று வாழ கடந்த 25 ஆண்டுகளாக தமிழர்கள் தம்மாலான



தந்தை செல்வா

சகல முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் கிடைத்த அதிகாரங்களை வைத்துக் கொண்டு தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழரின் அடிப்படை உரிமைகளை நிராகரித்து அடிமைப்பட்ட மக்களாக மாற்றி விட்டன.

சிங்களவருக்கும் தமிழருக்கும் பொதுவான இறைமையை தமிழருக்கு எதிராகவே இந்த அரசாங்கங்கள் பாவித்து வந்தன.

தமிழ் மக்களிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ள இறைமையைப் பயன்படுத்தி சுதந்திர தமிழ் ஈழம் உருவாக வேண்டும்.

இதற்கான ஆணையாகவே தேர்தல் தீர்ப்பை நான் கருதுகிறேன்.

இந்த ஆணையை நிறைவேற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி போராடும் என்ற புனித உறுதிமொழியை நான் தருகின்றேன் ★

## தந்தை செல்வா சொன்னவை

நாங்கள் சரணடையப் போவது இல்லை. கடைசி வரை போராடுவோம் நமது கோரிக்கை நீதியானது என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்

* *

விலை மதிப்பற்ற சுதந்திரமானது மிகவும் இலகுவாகப் பெற்று விடக் கூடியது ஒன்றல்ல அது போராடிப் பெற வேண்டியதாகும். அதனைப் பெற நாம் நீண்டதொரு போராட்டத்துக்குத் தயாராக வேண்டியவர்களாயுள்ளோம்.

* *

தமிழினத்துக்கு சுயஆட்சி வழங்காமல் இலங்கை ஆட்சி பீடத்தில் அமரும் எவரும் நிம்மதியாக சுதந்திரமாக இயங்க முடியாது. அவர்கள் பெற்ற சுதந்திரத்தை அவர்களாலேயே அனுபவிக்க முடியாமல் போய்விடும்.

* *

பேச்சு வார்த்தைக்கு வரமாட்டோம் என்று நாம் ஒரு போதும் கூறக் கூடாது. அது தவறு. அரசு நம்மை அழைத்தால் நாம் போவது தான் சரியானது பேச்சு வார்த்தை ஒன்று நடைபெறுமானால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இலட்சியமான தனி நாடு கோரிக்கையை நான் அங்கு முன்வைப்பேன்.

* *

பேச்சுவார்த்தை, ஒப்பந்தம் என்று கூறிக் கொண்டு, அற்ப சலுகைக்காக தமிழன் சுதந்திரக் கோரிக்கையையும் தன்மானத்தையும் விற்றுவிட நாம் தயாராக இல்லை—இதை ஆணித்தரமாகக் கூறுகிறேன். தமிழ் ஈழத்தைப் பெறுவது தான் எனது இலட்சியம்—கொள்கை. அதைப்பற்றி வேண்டுமானுல் யாருடனும் பேசத்தயார். வேறு எந்தப் பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை.

* *

எமக்கு என்று ஒரு அரசு ஏற்படும் என்ற விசுவாசம் ஏற்படவேண்டும் பலவீனத்தால் தான் பல தேசங்கள் அடிமை நிலைக்கு உதைத்துத் தள்ளப்பட்டன

* *

இலட்சியத்தை இறுதி வரை காப்பாற்றும் வீரர்களே எமக்குத் தேவை. இனத் துரோகிகள் அல்ல.

இலங்கைத் தமிழரின் அரசியல் தந்தை அமரர் சா. ஜே வே செல்வநாயகம்.

தந்தை செல்வா, பெரியவர் — இப்படித் தான் தமிழ் மக்கள் அவரை அன்புடனும் அபிமானத்துடனும் அழைத்தனர்; அழைக்கின்றனர்.

அவர் இற்றைக்கு இருபது இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் தீர்க்கதரிசனத்துடன் தெரிவித்த கருத்துக்கள் இன்றும் பொருந்தும்.

தந்தையின் 88 ஆவது பிறந்த தினம் எதிர்வரும் திங்கட்கிழமை (31-3-1986) அனுஷ்டிக்கப்படுகிறது.

தந்தை காலத்துக்குக் காலம் பேசிய பேச்சுகள் சிலவற்றைத் தொகுத்து அவரது சிந்தனைகளை வாசகர்களுக்கு ஞாபகப்படுத்துகிரேம்.

— ஆசிரியர்

# வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்

[தமிழர் விடுதலைக் கூட்டணியின் சரித்திரப் புகழ் வாய்ந்த வட்டுக்கோட்டை மாநாடு 1976 மே மாதம் இடம் பெற்றது. அந்த மாநாட்டில் தந்தை செல்வா நிகழ்த்திய தலைமைப் பேருரையின் ஒரு பகுதி இது:]

பதினைும் நாற்றுண்டில் போர்த்துக் கேயர் இங்கே படையெடுத்த போது ஈழத் தமிழ் அரசு, தனது சுதந்திரத்தைக் காப்பாற்ற அவர்களோடு தனித்து நின்று போராடி அவர்கள் படை வலிக்கு ஆற்ருது அடங்கியது.

அப்போதும் அயல் நாட்டிலே வாழ்ந்த சிங்கள மக்கள் எங்களை வேறு இனம், வேறு நாடு என்று கருதி எங்கள் உதவிக்கு வரவில்லை.

இறுதியாக இலங்கை முழுவதையும் ஆங்கிலேயன் ஆட்சி ஏற்று சிங்கள நாட்டையும் தமிழ் நாட்டையும் 1833 இல் தன் வசதிக்காக ஒரு நிர்வாகத்தின் கீழ் அமைத்தான்

அந்த நேரத்தில் கூட கண்டி நாட்டுச் சிங்களவர்கள் தங்களைக் கரையோர நாடுகளோடு ஒன்ருகச் சேர்க்க வேண்டாம் என்று ஆட்சேபித்தார்கள்

ஆனுல் இன்று சிங்களவர் கையில் இலங்கையின் முழு ஆட்சியும் வந்தடைந்து தமிழும் தமிழினமும் தமிழ்நாடும் இந்த அந்நியர் ஆட்சியின் கீழ் தொடர்ந்து அல்லலுற்று அழியும் நிலையில் இருக்கிறது

இந்த அடிப்படையான சரித்திரத்தை எவரும் மறுக்க முடியாது 1803 ஆம் ஆண்டிலே வரையப்பட்ட அரோசிமித் படம் கூட இலங்கைத் தமிழர்களின் பாரம்பரியமான தாயகம் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ளதாக எடுத்துக் காட்டுகிறது

1797 ஆம் ஆண்டு பதியப்பட்ட கிளகோண் குறிப்பும் இந்த நிலையைத் தெளிவாக்குகின்றது. இவை சரித்திர உண்மைகள்.

தேசிய இனங்களுக்குரிய இலக்கணத்தில் தமிழரும் சிங்களவரும் இன்று இரு வேறு இனங்களே! அவர்கள் சரித்திரத்தால், தேசத்தால், மொழியால், சமயத்தால், கலாசார, பண்பாட்டால் மரபுகளால் வேறுபட்ட இனங்களே.

விடுதலை இயக்கத்தில் எல்லோரும் பங்குபெற வேண்டும் எவரும் தனக்கு இதில் பங்கு இல்லை என்று தட்டிக் கழிக்க முடியாது.

சுதந்திர இனமாக வாழுவது எங்கள் எல்லாருக்கும் பொதுவான தார்மீகப் பொறுப்பு,

ஆகவேதான் உங்கள் எல்லாரையும் உற்சாக மூட்டி அழைக்கிறேன் வாருங்கள் விடுதலை காண்போம். சுதந்திரம் பெறுவோம். ●

# சம்பளம் பெருது வேலை செய்யும் புதுமையான தொழிலாளி பெண்!

இன்றைய உலகில் பெண்கள்' என்ற தலைப்பிலான கருத்தரங்கை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ்கிளை சென்ற நோன்மதி தினத்தில் ஒழுங்கு செய்திருந்தது.

அக்கருத்தரங்கில் சிறப்புரை ஆற்றிய திருமதி சர்வமங்களம் கைலாசபதி கூறிய கருத்துக்களை இங்கு தொகுத்துத் தருகிரேம்.

தொகுப்பு:
வி வரதசுந்தரம்

பெண்ணிலை வாதம் (Ferminism) உலகளாவிய நிலையில் பரவியுள்ள போதிலும், சர்வதேச மகளிர் ஆண்டு பிரகடனஞ் செய்யப்பட்ட போதிலும், ஆண்டு தோறும் பல்வேறு நாடுகளில் பெண்கள் தின நிகழ்ச்சிகள் இடம்பெறும் போதிலும், பெண்ணிலை வாதச் சிந்தனைகள் இன்னும் பெரும்பாலான பெண்களை எட்டவில்லை.

ஆபிரிக்க நாடுகளில் சோளம் விளைவிப்பதிலும் ஏனைய நாடுகளில் வயல் அறுவடையிலும், தொழிற்சாலைகளில் கடின உழைப்பி

### புருஷனும் அரசும் அவளை சுரண்டி வருகிருர்கள் !!

லும் நமது நாடுகளில் நிலம் பெருக்கி, உடைகள் கழுவி சமையல் செய்து குழந்தைகளைப் பராமரித்து இயந்திரம் போல் உழைப்பதிலும் பெண்கள் அமிழ்ந்து விடுகிருர்கள்.

''உமது மனைவி வேலைக்குப் போகிருரோ'' என்று கேட்டால் சில கணவர்கள்'' ''இல்லை அவர் வீட்டில் சும்மா இருக்கிருர்'' என பதில் தருவதில் இருந்து வீட்டில் மனைவி ஆற்றும் வேலைகளை அவர் சரியாக எடைபோடவில்லை என்பது தெளிவாகிறது.

தொழில் பார்க்கும் பெண்கள், தமது வீட்டு வேலைகளையும் செய்யாமல் இல்லை. இதனுலே அவர்கள் சராசரி ஆணைவிட இருமடங்கு வேலை செய்கிருர்கள்.

வீட்டு வேலைகளில் மனைவிக்கு உதவுவது கௌரவக் குறைவு என்று சில கணவர்கள் கருதுகிருர்கள். புரிந்துணர்வுடன் மனைவியின் வேலைப் பளுவைக் குறைக்கும் கணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளுக்குக் கணவனே அல்லது அரசாங்கமோ ஊதியம் வழங்குவதாக இருப்பின் அது எவ்வளவு பெரிய தொகையாக அமையும், பெண்ணின் தொழிலால் பயன் பெறுபவர்கள் கணவனும் அரசும் ஆகும்

பெண்களின் வீட்டு வேலையைச் சுரண்டி வாழ்வது கணவனும் அரசும். ஏனெனில் எதுவித சம்பளமும் பெருத புதுமையான தொழிலாளர்கள் பெண்கள்.

ஆண் ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்து கொண்டால் எதுவித சம்பளமும் கொடுக்காமல், வேலை நிறுத்த பயமில்லாமல் அவளுடைய உழைப்பைப் பெற முடிகிறது.

இங்கு கணவன் பூஷுவா, மனைவி தொழிலாளி.

அடுத்தடுத்து ஏற்படும் மகப்பேறு காரணமாகவும், வேலைப்பளு காரணமாகவும் தமது ஆரோக்கியம் குன்றுவதால் பெண்கள் சிறிய குடும்பங்களை விரும்புகிருர்கள்.

இதனுல் கருத்தடை செய்து கொள்ளப் பெண்களுக்கு முழுமையான சுதந்திரம் இல்லை. கணவன், சமயம், வைத்தியர், அரசு ஆகியவற்றின் அபிலாஷைகளுக்கு அவள் கட்டுப்பட்டாக வேண்டி இருக்கிறது. சீனுவில் நிலைமை வேறு அங்கு ஒரு பிள்ளை மட்டும் பெறுபவருக்கு அதிக சலுகைகள் உண்டு.

### பெண்ணிலை வாதம்

தமிழர் சமுதாயத்தை எடுத்துக் கொண்டால் குங்குமப் பொட்டிட்டு,

### சர்ச்சை சக்கரம்

காலில் மெட்டி அணிந்தால் அவள் கணவனின் உடைமை என்ற மனோபாவம் உருவாக்கப்படுகிறது. ஒரு தாரமணம் என்ற கருத்து நிலை பெண்களுக்கு மட்டும் கணவருக்கு இல்லை

பெண்கள் கற்புநிலை தவறுவதால் தான் நாட்டில் அனர்த்தங்கள் விளைவதாக ஒரு கருத்துநிலை நிலவுகிறது. 1918 ஆம் ஆண்டில் இது தொடர்பாக லூஷின் சொன்ன கருத்துக்களை இங்கு சிந்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# புற்று நோய்: சில அறிவுரைகள்

## நோய் உருவாகும் காரணங்கள்

— 2 —

- டாக்டர் வே. கிருஷ்ணராஜா -
சத்திர சிகிச்சை நிபுணர்

இந்நோய் உருவாகுவதற்கு என்ன காரணங்கள் என அறிதல் இதைத் தடுப்பதற்கு உதவும் கலத்தில் அடிப்படையில் எம் மூல காரணத்தால் உருவாகின்றது என கண்டு பிடிக்கப்படவில்லை யாயினும், இதன் தோற்றத்தில் ஈடுபடும் அல்லது பங்களிக்கும் பல காரணங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றை-

1. பொதுவான காரணிகள் எனவும்
2. குறிப்பான காரணிகள் எனவும் பிரிக்கலாம்.

பொதுக்காரணிகள்

அ) பரம்பரைக்காரணி

புற்றுநோய் பரம்பரையாக தோற்றுவதில்லை என்பது (சில மிக அரிய வகைகளை விட) உறுதியாகத் தெரிந்ததே. மிக அரிய வகைகளும் மிகவும் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றன. சிலருக்கு புற்றுநோய் உருவாகுவதற்கு, பரம்பரையை சேர்ந்ததல்லாத அதிக வாய்ப்புக்கள் இருப்பதால் வேறு காரணிகள் இவர்களில் இலகுவில் புற்றுநோயை தோற்றுவிக்கக் கூடும். புற்றுநோய் குடும்பத்தில் ஒருவருக்கு ஏற்பட்டால் மற்றோருக்கும் ஏற்படுமென அச்சங்கொள்ளத் தேவையில்லை.

ஆ) வைரசுக்கள்

இவை மிருகங்களில் புற்றுநோயை உருவாக்குவதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருப்பினும், மனிதரில் மிகச்சில வைரசுக்களே இதற்குக் காரணமாக உள்ளன (உ. ம்) கெ(h)ப்பற்றைரிஸ் வைறஸ், எப்ஸ்ரையின் பா(b)ர் வைறஸ் இவை ஈரலிலும், மூக்குத் தொண்டையிலும் நிணநீர்ணுக்களிலும் புற்றுநோயை ஏற்படுத்தலாம்.

இ) ஒமோன்கள்

இவற்ருல் உண்டாகும் சில புற்றுநோய்கள், சில அங்கங்களின் சிலரில் மட்டுமே ஏற்படுகின்றது. உ. ம். மார்புப் புற்றுநோய், புரோஸ்ரேற் புற்று நோய், கருப்பை புற்றுநோய்.

ஈ) அதிகளவு மன நெருக்கம்

இதனுல் ஓமோன்கள் சுரக்கப்பட்டு இவை காரணமாக அமையலாம்

### வைத்திய சஞ்சீவி

உ) புற்றுநோயை உருவாக்கக்கூடிய கர்த்தாக்கள், பதார்த்தங்கள்

இவை பெரும்பாலும் பௌதீகம் அல்லது இரசாயன பதார்த்தங்களாகும். இவை பெரும்பாலும் குறிப்பிட்ட சில தொழில்களைச் செய்பவர்களைப் பாதிக்கின்றது

1) பௌதிக காரணிகள்

காரணி: அயனியாகும் கதிர் வீசல், தொழில்: ஒளி வீசும் அல்லது ரேடியம் முகம் செய்தல், நோய் எழும் அங்கம்: எலும்பு, தோல், வெண் [illegible] பெருங் குடல்.

காரணி: [illegible] தொழில்: பைப் புகைத்தல், நோய் எழும் அங்கம்: உதடு, வாய்.

2) இராயன காரணிகள்

காரணி: புகைக்கரி, கரித்தார், தாது எண்ணெய், தொழில்: சுரங்கம், நோய் எழும் அங்கம்: நுரையீரல், தோல்.

காரணி: அரோமற்றிக் அமின்ஸ், தொழில்: சாயம் தொகுப்பு, நோய் எழும் அங்கம்: சிறுநீர்ப்பை,

காரணி: நப்(f)தலமின்ஸ், தொழில்: ரப்பர் கயிறு, நோய் எழும் அங்கம்: சிறுநீர்ப்பை,

காரணி: வெப்பத்தார் அஸ்பெஸ்ரோஸ் குரோம் [illegible] நிக்கல் [illegible] உலோகத்தாது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# சமுதாய அநீதிகளை அழிக்க இறுதிவரை பேனு பிடித்த

## இலட்சிய எழுத்தாளர் டானியல்

அமரர் டானியல் தமிழ் நாட்டில் தஞ்சை மண்ணில் காலமான செய்தி தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது; எதிரிகளையுமே கண்ணீர் வடிக்கச் செய்துள்ளது.

இலட்சியத்துக்காக இலக்கியம் படைத்த டானியல் கொள்கையைப் பொறுத்த வரையில் அழுங்குப் பிடியாய் நிற்கும் இயல்பு படைத்தவர். ஆனுல் அவருடைய நண்பர்களைப் பார்க்கும் போது, அதன் பரவலான தன்மையைப் பார்க்கும் போது இந்த மனிதர் டானியல் எவ்வாறு இத்தனை பேரையும் வசீகரித்தார் என்பது அதிசயந்தரும் நிகழ்வாகும்.

டானியலின் இலக்கியங்கள் அனைத்தும் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றியவையே டானியல் தனது இலக்கியப் பணியை அரசியல் பணிக்கு உள்ளடக்கியதாகவே கருதினுர். அவர் அரசியலை, சமூக மாற்றப் போராட்டத்தை முதலிடத்தில் வைத்தார்.

டானியல் மாக்ஸிய சித்தாந்தத்தை ஏற்றுக் கொண்டு அதன் வெற்றிக்காகச் செயற்பட்டதோர் புரட்சிப் போராளி டானியல் தமிழர் மத்தியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் துயர் தீர்க்க தன் வாழ்நாள் பூராவும் பாடுபட்ட தனிப்பெருந்தலைவர் உலகம் பூராவும், சுரண்டலற்ற புதுமைச் சமுதாயம் ஏற்பட்டு அதன் மூலம் இன, மொழி, சாதி பேதங்கள் தகர்க்கப்பட்ட மனித குலம் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று பாடுபட்டதோர் சர்வதேசியவாதி, டானியல்.

டானியல் சமூக முன்னேற்றம், வன்முறைப் புரட்சி மூலந்தான் ஏற்பட முடியும் என்று நம்பி அவ்வழியில் செயற்பட்டதோர் புரட்சிப் போராளி.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் வர்க்க பேதமற்ற சமுதாயத்துக்கான போராட்டத்தின் பாதையில் தான் தீர்க்கப்படும் என்று டானியல் உறுதியாக நம்பினுர்.

மற்றவர்களுக்கு அஞ்சியோ, சந்தர்ப்பவாத நோக்கத்திற்காகவோ, முகமனுக்கோ தனது கருத்தை மறைத்துப் பேசும் பண்பு டானியலுக்குக் கிடையாது. துப்பாக்கிக்கு முன்னுலும், மரணத்தின் முன்னுலும் அவர் தனக்குச் சரியென்று பட்டதையே கூறினுர்.

எழுத்தாளர், பல்கலைக் கழகக் கல்விமான்கள் போன்ற புத்தி ஜீவிகள் மத்தியில் டானியலுக்கு



கே. டானியல்

இருந்த இந்த நேர்மைப் பண்பு அரிதாகவே காணப்படுகின்றது. அதனுல் டானியல் மிகுதியும் உயர்ந்து வானளாவ நிற்கின்ருர்.

டானியல் தனது குடும்பத்தைப் பற்றியோ, சாதியைப் பற்றியோ கூற எப்பொழுதுமே வெட்கப்பட்டதில்லை. ஆனைக்கோட்டையில் சலவைத் தொழிலாளியின் மகனுகப் பிறந்த அவர் ஐந்தாம் வகுப்புக் கூடப் படிக்கவில்லை. ஆங்கில அறிவு சற்றும் இல்லாதவர் டானியல்.

டானியல் முதலில் சலவைத் தொழிலாளியாகவும், பின்னர் அலைந்து திரிந்து சோடா விற்பவராகவும், அதற்குப் பின்னர் சைக்கிள் மெக்கானிக்காகவும் உடலை அடித்து உழைத்தவர்.

யாழ் ரயில் நிலையத்துக்கு முன்னுல் காலஞ்சென்ற பூபாலசிங்கம் நடத்திய பழைய புத்தகக் கடையில் தான் டானியல் புத்தகங்களுடன் பரிச்சயமாகினுர். லோன்டறியால் வீடு திரும்பும்போது அவர் தினமும் அந்த வழியால் செல்வாராம்.

பின்னர் ராமசாமி ஐயர், அ வைத்தியலிங்கம், எம் கார்த்திகேசன், எம் சி சுப்பிரமணியம் ஆகிய அக்காலக் கம்யூனிஸ்டுகளுடன் அவர் நெருங்கிய சகாவாகி மாக்ஸிய சித்தாந்தத்தின்பால் இழுக்கப்பட்டார்.

47-ம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரை இந்த சித்தாந்தத்துக்கும் அதனை ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கும் விசுவாசமான ஆதரவாளனுக இருந்தார்.

மாக்ஸிம் கோர்க்கியின் படைப்புக்களை வாசித்த பின்னர்தான், தனக்கும் அத்தகைய இலக்கியம் படைக்க வேண்டும் என்ற தாகம் ஏற்பட்டதாக டானியல் அடிக்கடி கூறிக்கொள்வார்.

இளமைக் காலந்தொட்டே அவருக்குள் ஒரு பூகம்பம் குமுறிக் கொண்டிருந்தது. சமுதாயத்தின் அநீதிகளை அழித்தொழிக்க வேண்டும் என்ற குமுறல் அது. டானியல் தனது பேனுவை இறுதி மூச்சு வரை இந்தப் பணிக்கே பாவித்தார்.

டானியல் தனக்கு மரணம் விரைவில் ஏற்படும் என்பதை முன்னறிந்திருந்தார். ''அடிமைகள்'' நாவலின் முன்னுரையை வாசித்தவர்கள் இதனை அறிவர். அதற்குப் பின் அவர் மரணத்தின் வாயிலில் இருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

வீ சின்னத்தம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

★ வித்துவான் க. சி. குலரத்தினம் ★

## 2. இளமைக்காலம்

மட்டுவில் சின்னத்தம்பி என்பாரும் தனங்கிளப்பு வள்ளியம்மை என்பாரும் தவஞ்செய்து பெற்றபிள்ளை, கணபதிப்பிள்ளை, தங்கவிக்கிரகம் போல அழகானபிள்ளை. அவர் வாட்ட சாட்டமாக வளர்ந்து இரண்டு வர்களுக்கும் செல்லப்பிள்ளையாக உருவாகி வந்த காலத்தில் 1902 ஆம் ஆண்டு மகாசிவராத்திரி விழா அமைதியாக நடைபெற்றது. நூற்றுக்கணக்கான மக்களைப் போல, வள்ளியம்மையாரும் விரதம் அநுட்டித்து நித்திரை விழித்திருந்த வேளையில். எவ்வித நோயுமின்றி, அமைதியாக நடுச்சாமத்தில் இயற்கை எய்தினார்.

அன்று சின்னத்தம்பியாருக்கு முப்பத்தாறும் வயது அவர் மனைவி இறந்த பின்னர், மறுமணஞ் செய்யாமல், மைந்தனின் நன்மை கருதி தந்தையும் தாயுமாக மேலும் முப்பத்தாறு ஆண்டுகள் வாழ்ந்தார். மைந்தன் நலமே தம் நலம் எனக் கருதி அவனைச் சான்றோனாக்குவதற்குப் பெரிதும் ஆசைப்பட்டார்.

### எழுத்தறிவு

பிள்ளைக்கு ஏடு தொடக்கி எழுத்தறிவித்தற்கு மட்டுவிலில் நல்ல வசதியிருந்தது படிப்பாளிகள் நிறைந்திருந்த பிரதேசம் அது. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களிடம் படித்து முறுக்கேறிய பொன்னம்பலப்பேர்வழிகள் மூவர் அங்கே இருந்தார்கள். திண்ணைப் பள்ளிக்கூடம் தெருத்தெருவாய் இருந்தன. உரையாசிரியர் மட்டுவில் வேற்பிள்ளை அவர்கள், தமது திண்ணைப் பள்ளிக்கூடத்தைப் பாடசாலையாக்குவதற்குப் பெருமுயற்சி எடுத்து வந்தார். அவ்வூரவரான ஆயக்காரர் இராமலிங்கம் என்பவர் முயற்சியால் பாடசாலை உருவான போதிலும், அரசினர் உதவிப் பணம் பெற முடியாமல் அது வாடியுதிர்ந்து விட்டது

வேற்பிள்ளை உபாத்தியாயரின் முத்தமைந்தன் திருஞானசம்பந்தபிள்ளை என்பவர், சரசாலையில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து தாமே படிப்பித்து வந்தார். அவராலும் அதனைக் கொண்டு நடத்த முடியாமல் கைவிட்டு மட்டுவிலுக்கு மீண்டார்.

மட்டுவிலில் சின்னத்தம்பிப் போதகர் என்பவர் பிள்ளைகளை மதம் மாற்றிப் படிப்பித்து வந்தார். அவரிடம் செல்வமும், செல்வாக்கும், தேவாலய சகாயமும் கூடியிருந்தன. அன்றி அரசாங்கமும் ஐரோப்பிய மதத்தவர்களுக்கே முன்னுரிமை வழங்கி வந்தது. பாடசாலைகளை உருவாக்குதல் ஓரளவுக்குப் புற மதத்தவரின் ஏக போக உரிமையாயும் இருந்தது.

மட்டுவில் வடக்கில் பனையடிப் பிள்ளையார் கோயில் பழமையானது. அங்கேதான் சைவப்பெரியார் சின்னத்தம்பியார் வழிபாடு

## துள்ளிக் குதித்த பள்ளிப் பருவம்

செய்து வந்தார். அன்று 1904 ஆம் ஆண்டின் விஜயதசமி நாளில் பிள்ளையார் கோயில் விழாக் கோலம் பூண்டிருந்தது. பெரியபானையில் புற்கை, கடகங்கள் நிறைய மோதகம், தாம்பாளங்கள் நிறைய அவல், குலைகுலையாய் வாழைப்பழம் இவையெல்லாம் செல்லப்பிள்ளை கணபதிப்பிள்ளை ஏடுபிடிப்பதற்கு எடுத்த விழாக்கோலம்.

பிள்ளை ஏடு பிடித்த அடுத்தநாள் அயலில் சின்னத்தம்பிப் போதகரின் பரிபாலனத்தில் நிலவிய பாடசாலையில் சேர்ந்தார். எண், எழுத்து, வாசிப்பு, பூமிசாத்திரம் ஞானப்பால், வேதவினா விடை, மார்க்கு எழுதிய சுவிஷேசம் எல்லாம் படித்து மனனஞ் செய்த ஆற்றலுக்காகப் பல பரிசுகளும் பெற்றார்.

பாடசாலையில் தம்பையா என்பவர் பாடங்களைப் படிப்பித்து வந்தார். வேற்பிள்ளை அவர்களின் மைந்தன் திருஞானசம்பந்தபிள்ளை பூமிசாத்திரமும் ஏ.பி.சி டியும் சொல்லிக்கொடுத்தார். சம்பந்தரின் பூமிசாத்திரப் படிப்பு ஒரு மாதிரியானது. பூசந்தி, சலசந்தி, தீவு, குடாநாடு, கண்டம், சமுத்திரம், ஆறு என்பனவுக்கு வரைவிலக்கணம் சொல்லுதல் அவ்வளவுந்தான். 'ஆறானது மலையிலேனும் வாவியிலேனும் ஊற்றெடுத்து நிலத்தின் கண்ணேபாயும் சுத்த நீர்ப்பெருக்காம்' இவ்வளவும் பாடமாக்கி மூச்சுப்பிடித்து, அச்சரம் தவறாமல் பெலத்துச் சொன்னால் சரி இல்லையேல் கொய்யாத்தடி முதுகுத்தோலை உரிக்கும்.

மட்டுவிலில் கொய்யாப் பற்றைக்குக் குறைவே இல்லை.

கணபதிப்பிள்ளைக்கு எல்லாம் வரும். பூமிசாத்திரம் வராது. சம்பந்தர் ஆசிரியருக்கு அஞ்சி, என்ன செய்யலாம் என்று நண்பர் கந்தசுவாமியிடம் கேட்டார். 'நீ கொய்யாப்பற்றைக்குள் ஒளித்து நில்' இப்படிச் சொல்லிக்கொடுத்தவர் சம்பந்தர் ஆசிரியரின் தம்பியாரேதான். ஆனால் பிள்ளை அவர்கள் எவ்வளவு நேரத்துக்கு ஒளித்து நிற்பது என் றேங்கிக் கொய்யாத்தடியால் வாங்கிக்கொண்டதும் உண்டு.

இவ்வாறான சூழ்நிலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்துதந்த பிள்ளைக்கு, அயலில் நல்ல சைவாசாரச் சூழல் நிலவியது. சந்திர மௌலீசர் ஆலயத்தில் எல்லா விழாக்களும் விரத நாள்களும் கொண்டாடப் பெறும். அதிகாலையில் நீராடித் திருவெம்பாவை விழாக்கான வழிகாட்டியவர் மட்டுவிலைச் சேர்ந்த உறவினர் இராமலிங்கம் என்பவராவர்.

சட்டைநாதர்

ஐந்தாம் வகுப்புவரை படித்தபிள்ளைக்குப் பதது வயது. ஆள் வாட்ட சாட்டமாக வளர்ந்து, ஓரளவு சண்டித்தனமும் பழகி இருந்தார். இவரின் போக்கு சின்னப்பேரனார் சட்டைநாதனின் போக்கை ஒத்திருப்பவே, ஊரவர் இவரைச் சட்டைநாதர் என அழைப்பதும் வழக்கமாகி அதுவும் ஓரளவுக்கு நிலைத்தது. தமது சின்னப்பேரன் சட்டைநாதரைப் பற்றிப் பிள்ளை அவர்கள் 1942 ஆம் ஆண்டில் சொன்ன கதை.

சட்டைநாதர் நான்கு பேர் தோளிற்சால்வையைக் கையிற் பிடித்தவாறு பின் தொடரக் கீரிமலைக்குப் போனார். அங்கே ஆசார சீலராய் நீராடிவிட்டுத் திரும்பி வந்த ஒரு பெரியவரை முட்டிமோதிக் கொண்டு ஒருதடியன் போனான். சட்டைநாதர் எட்டி நடந்து அந்தத் தடியனைக் காலால் எற்றினார். அவன் பந்துபோல மேலெழும்பிப் பாம்பு போல சுருண்டு பற்றைக்குள் விழுந்து, எழுந்து நின்று, 'உன்னைக்கடவுள் கேட்பார்' என்றான் 'கேட்டால் சட்டைநாதர்என்று சொல்போ, என்று உறுக்கினார். அவன் ஓடி மறைந்து விட்டான்.

கணபதிப்பிள்ளைக்குக் கோபம் வருவது மிகவும் குறைவு அது பிறப்பு மூலத்துக்குரிய மரபு வழிப்பண்பியல் சார்ந்து வந்த பண்பாடு. அது தர்மர் அனைய தந்தை சின்னத்தம்பியார் வழியாலும் பேரன் ஆறுமுகத்தார் வழியாலும் வந்தது. ஆனால் கோபம் எப்போதாவது வந்தால், சின்னப்பேரன் சட்டைநாதரின் சன்னதம் ஆட்டம் சில நிமிடம் நிலைப்பதும் வழக்கம்.

—வளரும்

## செந்தமிழ் முனியே

வித்துவான் சி. சரவணமுத்து

பண்டித மணியே எம்மைப் பாரினில் வாழத் தந்தீர்
எண்டிசைப் புகழை நாட்டி இருந்தமிழ் வாழ வாழ்ந்தீர்
கண்படை கொண்டீர் யாரே கருத்துடன் தமிழைக் காப்பார்
புண்ணில் வேல்பாய்ந் தாற்போற் பெருந் துயர் வெள்ளத் தாழ்ந்தோம்.

சைவமும் தமிழும் போற்றுஞ் சற்குரு போற்றி நேற்றே
மைவரும் கண்டத் தெந்தை மாணடி யடைதல் கண்டான்
தெய்வத மொழியாள் மீண்டுன் திருக்கரம் பற்ற வேண்டிக்
கைவரும் விரதம் பூண்டாள் கந்தவேள் கோட்டம் புக்காள்.

கந்தவேள் புராணந் தன்னைக் காதலித் தாய்வு செய்தே
எந்தையே மெய்கண்டாரின் ஈடிலாப் பொருள்கள் தேற்றி
நந்தமிழ்ப் பொருளால் கண்டே நயப்புற நூல்கள் யாத்தாய்
நந்தலில் புகழார் நல்லை நாவலன் பணி கொண்டாயே.

செந்தமிழ் முனியே யுன்றன் சிந்தனைத் தேனை மாந்திச்
சந்ததம் வணங்கி நின்னைத் தாழ்ந்திது வேண்டி நின்றோம்
பந்தம தகன்ற மேலோய் பாரினிற் பாரந் தீர்க்க
வந்தவ தரித்தே மண்ணில் வழிவழி மரபைக் காப்பாய்

# ராஜீவுக்கு விடுக்கப்பட்ட ராஜதந்திரச் சவால்!

இலங்கை ஒரு நாடாகத் தொடர்ந்து விளங்குவதற்கு உள்ள ஒரே வழி, தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளை இலங்கை அரசாங்கம் ஏற்பது தான்
'Probe India' ஆங்கில மாத இதழில் வெளியான கட்டுரையில் மேற்கண்ட கருத்து வெளியிடப்பட்டுள்ளது
ஜி. பார்வதி இக் கட்டுரையை எழுதியிருக்கிறார்.
கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.

சொர்க்கத் தீவு என்று அழைக்கப்படும் இலங்கையில், தமிழர் தாயகம் என்று கருதப்படும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மீண்டும் வன்செயல்கள் அதிகரித்தன.

ஆயுதப்படையினர் நடவடிக்கைகளை அதிகரித்தனர்.

இனக்கொலையில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றும் இயக்கம் (புரோடெக்) ஜனவரி முதல் வாரத்தில் 251 குடிமக்கள் கொல்லப்பட்டதாக அறிவித்துள்ளது.

தமிழர் மாவட்டங்களில் சுமார் 50,000 மக்கள் அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 21,737 பேர் அகதிகளாக உள்ளனர் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறியிருக்கிறார்.

பலனளிக்கக் கூடிய யுத்த நிறுத்தம் எதுவும் நடைமுறையில் இல்லை. அரசு நியமித்த யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இருந்து இரண்டு தமிழ் உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்துவிட்டனர்.

'அரச பயங்கரவாதம்' அதிகரிக்கப் போராளிகளும் தங்கள் தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். எங்கு தாக்குதல்களை நடத்த முடியுமோ அங்கு எல்லாம் தாக்குதல்களை நடத்து கின்றனர் போராளிகள்

புதிய வருடம் பிறந்த அன்று மன்னார் தள்ளாடி முகாமில் சிப்பாய்கள் மத்தியிலே கலவரம் நிலவியது.

ஆயுதப்படையினர் மத்தியில் 30 லட்சம் தமிழர் வாழ்கின்றனர் அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை.

நாட்டுக்குளேயும் வெளியேயும் தமிழரின் நடமாட்டம் கடுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வாழ்வா, சாவா என்ற அவர்களின் போராட்டம் சில போராளி அமைப்புக்களினால் தலைமை ஏற்று நடத்தப்படுகிறது

எண்ணிக்கையிலும் ஆயுத பலத்திலும் போராளிகள் ஆயுத படையினரை விட குறைவாகவே உள்ளனர்.

இருந்தும் போராளிகள் ஆயுதபடையின நாட்டில் வாய்ப்பூட்டு போடப்பட்ட நிலையில் இருந்தார்கள்.

இந்த நிலையைத் தவிர்த்து இருக்கலாம்

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இலங்கை ஜனாதிபதி இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும் எண்ணம் இல்லை என்பது மறைந்த பிரதமர் இந்திரா காந்திக்கு ஏற்கனவே தெரிந்து இருந்தது. சுதந்திரம் அடைந்த பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் எல்லாம் தமிழரை இரண்டாந்தர பிரஜைகளாக மாற்றிவிட்டன. என்பது அறிந்த விஷயம்.

திம்பு பேச்சுக்களின் பின்பு எழுந்துள்ள நிலைமையை வைத்து பிரதமர் ராஜீவ்காந்தி இந்த உண்மையைப் புரிந்து இருப்பார்

திம்புவில் தொடங்கி மேல் திரு. ஜெயவர்த்தன போட முடியும்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முன்னர் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும்படி திருமதி பண்டாரநாயக்கா வலியுறுத்துவார் என்பது திரு. ஜெயவர்த்தனவுக்குத் தெரியும்

திருமதி பண்டாரநாயக்காவும் அதுபோன்றே நடந்து வருகிறார்.

இப்பொழுது திரு. ஜெயவர்த்தன இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு "திருமதி பண்டாரநாயக்காவின் கோரிக்கையினால் எனது கைகள் கட்டுப்பட்டுள்ளன."—என்று சொல்ல முடியும்,

மீண்டும் இனப்பிரச்சினையை ஆரம்பித்த இடத்துக்கே கொண்டு போய்விட்டேன் என்று திரு. ஜெயவர்த்தன கூட்டணியின் யோசனைகளை திரு ஜெயவர்த்தனவைக் கொண்டு எப்படி ஏற்றுக் கொள்ள வைப்பது என்பதே யாகும்.

14 5 85இல் அனுராதபுரத்தில் இடம்பெற்ற படுகொலையைத் தொடர்ந்து திரு. ஜெயவர்த்தன டில்லிக்கு பறந்தோடி வந்தார்.

தமிழர் தாயகத்தில் ஆதரவு வழங்கும் தமிழ் மக்கள் மத்தியில் போராளிகள் இயங்குவது ஒரு புறம்

ஆனால் சிங்களவர் பிரதேசத்தில் சக்திவாய்ந்த ஆயுதங்களுடன் இயங்கும் ஆயுத, பொலிஸ் படை முகாம்களுக்கு கண்களுக்கு மண்ணைத் தூவிவிட்டு புகுந்து போராளிகள் இச்செயலைச் செய்தனர்.

சிங்களவரின் மனோநிலையில் இது ஒருதாக்கத்தை ஏற்படுத்தியது.

சிங்கள பௌத்தர்கள் மனதில் அனுராதபுரம் 2,000 ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட பௌத்த தலம்.

## இலங்கை இனப்பிரச்சினையை அவர் எப்படிக் கையாளுவார்?

டுடன் சரி நிகர் சமானமாகப் போராடுகின்றனர்.

தியாகம், இலட்சியத்தில் அசையா நம்பிக்கை, அர்ப்பணம் ஆகியன காரணமாகவே தமிழ் போராளிகள் அரசாங்கம் ஒன்றின் உதவி இல்லாது இருந்தும், தாக்குப் பிடிக்க முடிகிறது.

### யாருக்கிடையில் பிரச்சினை?

பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் இடையே உள்ள தகராறு அல்ல இலங்கையின் பிரச்சினை.

சிங்கள மக்கள் சார்பில் பேசும், செயல்படும் இலங்கை அரசுக்கும் தமிழ் சிறுபான்மையினருக்கும் இடையேயானது தான் இந்தப் பிரச்சினை. யுத்த நிறுத்த காலத்தைப் பயன்படுத்தி இலங்கை அரச ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டது அதே நேரத்தில் போராளிகள் தமிழ்

டில்லியில் முடிந்த நீண்ட, கடினப் பேச்சுக்களின முடிவில் இரண்டு நகல் திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன,

திரு. ஹெக்டர் ஜெயவர்த்தன தலைமையிலான இலங்கை அரசுக்குழு சமர்ப்பித்துள்ள நகல் திட்டம் தமிழரின் குறைந்த பட்ச அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை

தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த மாற்று யோசனைத் திட்டம், போராளிகளின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதாக அமையவில்லை.

கூட்டணியின் மாற்று யோசனைகளைத் தொடர்ந்து, 'பந்து' தனது பக்கம் வந்து விட்டது என்பதை உணர்ந்த திரு ஜெயவர்த்தன, தனது அரசியல் எதிரி திருமதி பண்டாரநாயக்காவுக்கு மீண்டும் குடியுரிமையை வழங்கி விட்டார்.

இனி தமிழர் கோரிக்கைகளை நிராகரிப்பதற்கான பழியை திருமதி பண்டாரநாயக்காவின்



ஆற, அமர்ந்து இருந்து சிரிக்க முடியும்.

### கூட்டணி யோசனை

தமிழ் ஈழத்துக்காகப் போராடும் பல்வேறு தமிழ்ப்போராளி அமைப்புக்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் மாற்று யோசனைகளுக்கு உடன்பாடானவை அல்ல என்பது உண்மையே

இருந்தும் மாற்று [illegible] இந்தியாவினால் முடியும். இந்தியாவுக்கு உள்ள பிரச்சினை என்னவென்

தமிழர் ஆட்சியில் இருந்து சிங்களவர்களுக்கு துட்டகைமுனு மன்னர் விடுதலை பெற்றுக் கொடுத்ததும் இந்த அனுராதபுரம் மண்ணில் வைத்துத்தான்.

சிங்கள பௌத்தர்களுக்கு 2,000 ஆண்டுகள் சரித்திரம் இருக்கும் என்றால், இலங்கைத் தமிழருக்கும் கிறிஸ்துவுக்கு முன் 1,000 ஆண்டுகள் தொடக்கம் முறிவே இல்லாத சரித்திரம் உண்டு என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இலங்கைத் தீவில் இரு தரப்பாருக்கும் சமமான உரிமை உண்டு

இரண்டு இனங்களும் சமமான பிரஜைகளாக மகிழ்ச்சியாக வாழுவதே கௌரவமானவழியாகும்

இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகளில் கூறப்பட்டுள்ள அரசமைப்பை ஏற்றுக்கொள்வதைத்தவிர வேறு வழியில்லை

கடந்த டிசெம்பரில் டாக்காவில் நடந்த சார்க் மாநாட்டில் வைத்து பிரதமர் காந்தி கூட்டணியின் மாற்று யோசனைகளை திரு. ஜெயவர்த்தன [illegible].

இந்த மாற்றுயோசனைகள் குறித்து இலங்கை

( 7ஆம் பக்கம் பார்க்க)

## வரலாற்று நெடுங்கணக்கில்

# ஈழத் தமிழ் மக்களின் தனித்துவத் தொன்மை

ஈழத் தமிழர் தாயகத்தின் தனித்துவ வரலாற்றை எழுதும் முயற்சி ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. வையா பாடல், கைலாய மாலை முதலியவற்றோடு இவ்வரலாற்று எழுத்தாண்மைப்பணிதொடங்குகிறது. இக்காலகட்டத்திற்கு முன் எழுந்த பௌத்த வரலாற்று நூல்கள் தமிழர் வரலாற்றை அறியப் பெரிதும் உதவமாட்டா எனினும், இவையே இத் தீவகத்தின் வரலாற்றை எழுதும் ஆதார நூல்களாக தென்னிந்தியாவின் அமைப்புக்குள் பொருந்துகின்றன.

ஈழத்தில் சிங்கள-பௌத்தப் பண்பாட்டின் வளர்ச்சியும் தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியும் தென்னிந்தியாவிலுள்ள தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாளப் பண்பாடுகளின் வளர்ச்சியை ஒத்ததாகும் இவை அனைத்தும் ஒரு பொதுப்பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு எழுந்தன என்றே கூறிவிடலாம் எனினும் பல்வேறு காரணங்களால் துரதிட்டவசமாகத் தென் தாக்கமும் வரலாற்று முதற் காலத்துக்குரிய பெருங்கற் பண்பாட்டுக் காலப்பகுதியில் நிகழ்ந்ததற்கான சான்றுகள் உள்ளன. இது தென்னிந்தியப் பண்பாட்டுக்குரிய பண்புகளையே கொண்டுள்ளது. இவ்வரலாற்று முற்கால, வரலாற்று முதற் கால முன்னோடிகள் இந்தியத் தீபகற்பத்தின் தென் கோடியில் நிகழ்ந்த ஒழுங்கு முறையின் விரிவாக்கமாக உள்ளன. வரலாற்றின் வைகறையில் அசோகன் காலத்தில் பௌத்தம் ஈழத்தின் பண்பாட்டைத் தான்

இன்று வரை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

வரலாறு என்பது அடிப்படையாக ஒரு சமூகம் தனது தொன்மையை நினைவு கொள்ளும் ஆற்றலைக் குறிப்பதாகும். இவ்வாற்றலை முனைந்து வெளிப்படுத்தும் முறை சமூகத்துக்குச் சமூகம் வேறுபடுகிறது. எனவே, ஒரு சமூகத்தின் வரலாற்றை மீள அமைப்பதில் அதற்குப் பொருத்தமான முறைகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு சமூகத்தின் வரலாற்றை உருவாக்குவதற்கு ஏற்ற முறையினை மேற்கொள்ளாது அதற்கு வரலாறு இல்லையென்று கூறுவது அச்சமூகத்திற்கு இழைக்கப்படும் தீங்கு ஆகும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஈழ வரலாற்று ஆசிரியர்கள் இக்குற்றத்தினையே புரிகின்றனர் எனவே நாம் இப்போது தொல்லியல், பண்பாட்டு மானிடவியல், நாட்டாரியல் ஆய்வுகள், வரலாற்று மொழியியல் முதலிய ஆய்வு நெறிகளையே ஈழத் தமிழர் சமூகத்தின் வரலாற்றை விளங்கிக் கொள்ளப் பயன்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

தென்னாசியாவும் ஈழமும்

நிலவியல், புவியியல், சூழலியல் நோக்கில் ஈழம் தென்னாசியத் துணைக் கண்டத்தின் பிரிக்க முடியாத கூறாகவுள்ளது ஈழத்தில் உருவாகி நிலவும் சிங்களப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும் தென்னாசிய அமைப்புக்குள், சிறப்பாக, அதன் மிக அண்மையான நாடான னிந்தியாவிலும் ஈழத்திலும் நிகழ்ந்த இத் தோற்றப்பாடு ஒப்பியல் முறையில் ஆராயப்படவில்லை.

வரலாற்று முற்கால, வரலாற்று முதற்கால முன்னோடிகள்.

ஈழத்தில் மனிதக் குடியேற்றம் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இன்றைய தமிழ் நாட்டின் தென்கிழக்குக் கரையோரத்தில் அமைந்திருந்த நிலப்பகுதியினூ

[கலாநிதி பொ. இரகுபதியின் 'ஈழத்தில் தமிழ்ச் சமூக உருவாக்கம்-வரலாற்றுச் சிறு குறிப்பு' என்ற ஆங்கில நூலை சென்னை ஆய்வு வளர்ச்சி நிறுவனம் (Institute of Research & Development) வெளியிட்டுள்ளது. இந்நூல் ஈழத் தமிழினத்தின் உருவாக்கத்தையும் வரலாற்றையும் சுருக்கமாக, ஆனால் உறுதியாக எடுத்துரைக்கின்றது. Tamil Social Formation in Sri Lanka - A historical Outline' என்ற நூல் இங்கு தமிழ் வடிவத்தில் தரப்படுகிறது ]

தருபவர்: திருச்செந்தூரன்.

டாகக் குடிபெயர்ந்து வந்த குறுணிக் கற்கால மனிதருடன் தொடங்கியதாகலாம். இப்பண்பாடு இலங்கையில் நிலவியதற்கான தொன்மையான சான்று கி. மு 28,000 ஆண்டுகளுக்கு முந்தியதென இப்போது கணிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த குடிபெயர்வு அலையும் பண்பாட்டுத் டும் சக்தியாக இங்கு வந்தது. இக்காலத்திலேயே முதன் முதலாகத் தென்கிழக்காசியா பேரரசு ஒன்றிணைப்பின் கீழ் வந்தது. ஈழமும் அதனை ஏற்றுக் கொண்டது.

ஈழத்தின் இனக் கட்டமைப்பு.
- புனைந்துரைகளும் உண்மைகளும்

சிங்களவர், தமிழர், தென்னிந்திய மக்கள் ஆகியோரிடையே இனக்குழு (race) வேறுபாடுகள் இல்லை. ஆனால் கி. பி. 6 ஆம் நூற்றாண்டளவில் ஈழத்தில் இருந்த பௌத்த பிக்குகள்வரலாற்று முதற் காலத்தில் ஆரியரின் குடிவரவு ஒன்று பெருந்திரளாக நிகழ்ந்ததாகக் கற்பனை செய்தனர் இதுவே சிங்கள-பௌத்த சமூகத்தின் உருவாக்கத்துக்குக் காரணம் என அவர்கள் எண்ணினர் அன்று நிலவிய சூழலுக்கு ஏற்ப இப்புனைகதை உருவாக்கப்பட்டது துரதிட்டவசமாக, இதுவே மக்களின் உளப்பாங்கை உருவாக்கும் அடிப்படையாகவும் ஈழத்தின் வரலாற்றுக்கான உறுதியான அடிப்படையாகவும் அமைந்து வருகிறது எனினும், உண்மையில் ஆரியக்குடிபெயர்வு நிகழ்ந்தமைக்கான புறவயமான சான்று எதுவுமில்லை. ஈழத்தின் இனக்கட்டமைவு முழுமையாகத் தென்னிந்தியப் பாங்கானது. இது தமிழ் நாட்டுடனும் கேரளத்துடனும் நெருங்கிய தொடர்புடையது. சிங்கள தமிழ்ப் பண்பாடுகள் ஒரு பொது மூலத்திலிருந்தே எழுந்தன. எனவே, ஈழநாட்டின்

(7-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறகுப் பறவைகள்

க. வைத்திலிங்கம்



## (இரு மாத குறுநாவல்)

இரவு சாப்பிட்டு விட்டு கனகசபை முன் வராந்தாவில் தனது பிரியமான ஈசிச் செயரில் வெகு ஆறுதலாகச் சாய்ந்திருந்தார். நல்ல பர்சைப் பெருமான் கறுத்தப் பச்சை அரிசிமாப்புட்டும் உள்ளி நிறையப் போட்டு வைத்த வெந்தயக் குழம்பும் என்றால் அவர் வெகு உற்சாகமாய் நாக்கைச் சப்புக் கொட்டிச் சாப்பிடுவார். அவரின் ருசி அறிந்து செய்வதில் பூரணம் கெட்டிக்காரி. இன்றும் அதே வகையான சாப்பாடு தான். நல்ல உற்சாகமாய் இருந்தார்

'எங்கையப்பா வெற்றிலைத் தட்டம்'

உள்ளுக்குள் பார்த்துக் குரல் கொடுத்தார்.

'கொண்டு வாறன் பொறுங்கோ!'

சொல்லிக் கொண்டே பூரணம் வெற்றிலைத் தட்

## (அத்தியாயம் - 9)

டுடன் வந்து அவருக்குப் பக்கத்தில் கீழே அமர்ந்தாள். பாக்கை எடுத்து மெல்லிய சீவலாகச் சீவி கையில் கொடுத்தாள்.

சீவல் கொஞ்சம் பெரிதாய் இருந்து விட்டால் தொலைந்தாள் அவள்!

'என்னடி விறகு தடி மாதிரி வெட்டி வைச்சிருக்கிறாய்!'

கனகசபை சொல்லுவதோடு மட்டுமல்லாமல் பூரணத்தின் முகத்தின் மீது வீசி எறிந்து விடுவார். அந்த துர்வாசக் குணத்துக்கு ஈடு கொடுக்கத்தான் பூரணம் நன்கு பழகிக் கொண்டாளே!

வெற்றிலையைச் சுண்ணாம்பு பூசி மடித்துக் கொடுக்க, கனகசபை வெகு லாவகமாக வாய்க்குள் திணித்து, மென்று எழுந்து போய் ஒரு தரம் உமிழ்ந்து விட்டு மறுபடியும் அட்டணைக் கால் போட்டுக் கொண்டு அமர்ந்து வெற்றிலையை நன்கு ரசித்துச் சப்பினர்.

'அது சரியப்பா, நான் ஒரு விஷயம் சொல்லப் போறன். கொஞ்சம் ஆறுதலாய் கேளுங்கோ-'

பெரிய பீடிகையோடு பூரணம் கனகசபையைப் பார்த்தாள்.

'என்ன சங்கதி...?'

'இவள் திலகத்தை நெடுகலும் இப்பிடியே வைச்சிருக்கப் போறியளே? அவளுக்கு இப்ப எத்தனை வயதெண்டு கொஞ்சமெண்டாலும் யோசிச்சியளே?'

பூரணம் இவ்வளவும் கூறிவிட்டாள் ஆனாலும் உள்ளுக்குள் பயம். எங்கே கனகசபை எகிறிப்பாய்வாரோ என்று!

'அதுக்கு நான் என்ன செய்கிறது! அவை அவையின்ரை தலை எழுத்துப்படி நடக்கட்டும்!'

'இப்பிடிச் சொல்லாதேயுங்கோ! நான் ஒரு விஷயம் சொல்லப் போறன். அது அனேகமாய் சரிவரும்! எங்கடை கோயிலடி வாத்தியார் காசிலிங்கத்தாற்றை மகன் சிவனேசன் திலகத்தை விரும்புகிறுனும். அவனும் நல்ல உத்தியோகம். ஆளும் நல்ல குணமான பெடியன். முந்தி ஒருக்கா தாய்க்காரி எங்கடை கற்பகம் அக்கா விட்டை இதைச்சொல்லி அனுப்பி எங்கடை விருப்பத்தைக் கேட்டவ. நான் எங்கடை பிரச்சினையள் முடியட்டும் எண்டு பேசாமல் இருந்தனான். இவ்வளவு நாளும் உங்களிட்டைச் சொல்ல இல்லை. இனி பெடியன் விரும்பி வாறதெண்டபடியால் சீதனப் பிரச்சினையும் அவ்வளவு இருக்காது. இனி இவள் திலகத்துக்கும் அது நல்ல விருப்பம் போலை தெரியுது!'

மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டே கனகசபையின் முகத்தைப் பூரணம் நோக்கினள்.

மிகவேகமாய் எழுந்து போய் முற்றத்தில் மிகுதி வெற்றிலைச் சாறையும் பளிச்சென்று துப்பினர் கனகசபை எழுந்து சென்ற வேகத்தில் திரும்பி வந்தார்.

'அடி செருப்பாலை எண்டாலும்! அவையும் பொம்பிளை கேட்டு வந்திட்டினமோ! கோயிலடி வாத்தி ஆர் பகுதி எண்டு உனக்கு விளங்குமே? உனக்கு மூளை இருக்கே? எங்கடை பரம்பரையிலை அவங்கடை வீடுகளிலை செம்பும் தண்ணியும் தூக்கி இருப்பபே? அவையின்ரை பணமும் உத்தியோகமும்! என்னுடைய கால் தூசிக்கு வருமே? போயும் போயும் அவங்கடை மாப்பிள்ளை பார்க்கிறாய்! மடைச்சி மடைச்சி!'

அவர் தேகம் படபடத்தது.

'இப்ப ஏன் கத்திறியள்? அதுகளின்ரை சாதி சனத்துக்கு என்ன குறை? ஆகத்தான் நால் பிடிச்சுக் கொண்டு நிற்கிறியள்! குலம் கோத்திரம் என்று கூத்தாடிக் கொண்டு உருப்படியான காரியங்களைச் செய்யத் தெரியாத உங்களிலும் பார்க்க அதுகள் நல்ல சனங்கள்! திலகமும் அவனைத்தானே விரும்புகிறாள்! உங்களுக்கென்ன கசக்குதே இதைச் செய்து வைக்க? இப்படியே வாழ்நாள் எல்லாம் சொல்லிக் கொண்டு அவளின்ரை சீவியத்தைப் பாழாக்குங்கோ!'

பூரணத்துக்கு அழுகை பீறிட்டது

'பூரணம்! மழைக்கால் இருட்டெண்டாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது! இந்தத் தில்லையற்றை கனகசபை கண்ட நிண்ட இடத்திலை கை நனையான்! திலகம் குமராய் இருந்து செத்தாலும் பரவாயில்லை! ஆனல், கோயிலடி வாத்தியின்ரை பெடியனுக்குச் செய்ய மாட்டன்! அதை மட்டும் ஞாபகத்தில் வைச்சுக் கொள்!'

நடந்தது, நடப்பது யாவும் தன்னை ஒன்றும் செய்யாது என்ற ரீதியில் சுகமான நித்திரையின் பிரதிபலிப்பாய் கனகசபையின் குறட்டை ஒலி முழு வீட்டையும் ஆக்கிரமித்தது. சோழித் தூக்கம் கொள்வதும் விழிப்பதுமாய் பூரணம் நெஞ்சு நிறைந்த பாரத்துடன் தலைக்கு கையை வைத்த படியே தலைவாசலில் படுத்துக் கொண்டாள் ஆனல் திலகத்துக்கோ-

இரவு சிவராத்திரியானது. ஏமாற்றத்தின் எல்லைக்குத் தள்ளப்பட்ட திலகம் கண்ணீரினல் தலையணையைத் தெப்பமாக்கினள்.

அவளால் வேறு என்ன செய்ய முடியும்? இயற்கையாய் அமைந்த அடக்கம் கூச்சம் காரணமாய் தனது உரிமைகளை தங்கை சரசு மாதிரி செய்து காட்டி, வெல்ல முடியாமல் போன இயலாமையை நினைத்து அழுதாள்.

சிவனேசனின் முகம் இரவு முழுவதும் விசுவரூபம் எடுத்து அவளைச் சாகடித்தது!

'திலகம் உனக்குத் துணிவில்லை! நீ காதலிக்க அருகதை அற்றவள்!' சிவனேசன் நேருக்கு நேர் நின்று பேசுவது போல் இருந்தது எல்லாமே பிரமைதான்!

ஆனல் பெற்றோரை, சட்ட திட்டங்களை மீறி அவளால் ஒன்றுமே செய்ய முடியாத கோழை நெஞ்சைப் படைத்த இறைவனைத் தன்னுள் திட்டினள் தங்கை சரசுவின் செய்கைகளை நியாயப்படுத்திய தன் மனத்துணிவும் தெம்பும் தன் விஷயத்தில் ஏன் கை கொடுக்க வில்லை?

இயற்கையாய் பெண்களுக்கே அணிகலனாக அமைந்த தன்னடக்கம் முன்னுக்கு நின்று அவளை வீழ்த்தி விட்டது

(வளரும்)

# இலக்கிய மாளிகை எனத் தகும் கல்கியின் 'பொன்னியின் செல்வன்'

## படைப்பு நோக்கில் ஓர் பார்வை

தி. சாந்தீபன்

நாவல்களில் சரித்திர நாவல்கள் சுவை மிகுந்தவை. அமரர் கல்கி அவர்களே சரித்திர நாவல்களைப் படைப்பதில் தமிழ்கூறும் நல்லுலகில் முதன்மையானவராக விளங்கினார் பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம் என்பன அவரெழுதிய ஆரம்ப நாவல்கள் இவற்றிற்கெல்லாம் சிகரம் வைப்பது போல் கல்கி 'பொன்னியின் செல்வன்' எனும் பெரு நாவலைப் படைத்தார்; தமிழுலகைத் தலை நிமிர வைத்தார். 'பொன்னியின் செல்வன்' ஐந்து பெரும் பாகங்களைக் கொண்ட மாபெரும் நாவல்; தமிழ் வாழும் நிலங்களெல்லாம் அதற்குள் அடங்கியிருக்கின்றன; சோழப் பேரரசின் எழுச்சியை விபரிக்கிறது. இது ஓர் இனிய தமிழ் இலக்கியம்; இன்பமான காவியம்.

தமிழரின் வரலாற்றில் முக்கிய பங்கை வகிக்கும் சோழரின் இரண்டாம் பேரரசு விஜயாலய சோழனுடன் ஆரம்பமாகின்றது. இச்சோழப் பரம்பரையில் உதித்தவர்களில் பிற்காலத்தில் ராஜராஜன் எனப் போற்றப்படும் அருள்மொழிவர்மனே முக்கியமானவன். தெற்கிலே ஈழம்வரையும் வடக்கிலே துங்கபத்திரை ஆறுகளைக் கடந்தும் கிழக்கு மேற்கிலே உள்ள தீவுகளை அடக்கியதுமான மாபெரும் சாம்ராஜ்யம் ஒன்றை அமைத்தவனே இந்த அருள்மொழிவர்மன். அவனது இளமைக் காலத்தில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளே 'பொன்னியின் செல்வனி'ல் அழகுடன் விவரிக்கப்படுகின்றன

இந்நாவலுக்கு கதாநாயகனாக கல்கி அமைத்துக் கொண்ட பாத்திரம் வாணர் பரம்பரையில் உதித்த வந்தியத்தேவன் எனும் இளவரசனுகும். நாவலின் பெரும்பாலான பாகத்தைக் கல்கி இவனுடனேயே கழிக்கின்றார். தொண்டைமண்டலத்திலிருந்து ஈழம் வரைக்கும் உள்ள நாடுகளில் இவன் செய்யும் பயணங்கள் அதியற்புதமானவை; மர்மச்சுவை மிகுந்தவை. நாவலுக்குப் புது மெருகூட்டிக்கொண்டிருக்கும் இப்பாத்திரத்தை சிறந்த வீரனாகவும் சமயங்கள் ஒற்றனாகவும் அமைத்துக் கொண்டது கல்கியின் திறமையே

கல்கி இந்த நாவலின் மூலம் பண்டைய தமிழ் நகரங்களின் சிறப்பை விவரிப்பது சுவைக்கத்தக்கது. ஏற்ற உவமான உவமேயங்களுடனும் அணிகளுடனும் அவர் வர்ணிக்கும் பாங்கே தனித்தன்மையானது. கடம்பூர் நகரிலே தொடங்கும் வருணனை குடந்தை, தஞ்சை, பழையாறை, காஞ்சி, ஈழத்தின் துறைமுக பட்டினமான மாதோட்டம் எனப் பல நகரங்களையும் நோக்கி விரிகின்றது கல்கி இவற்றை வர்ணிக்கும்போது, இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு புகழ் பெற்றுத் திகழ்ந்த அந்த நகரங்களில் எங்கோ ஒரு மூலையில் நிற்பது போலவும் அவற்றின் சிறப்பை ஐம்பொறிகளாலும் அள்ளிப் பருகுவது போலவும் பற்[illegible] கோட்டைகள், மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், சுற்றுமதில்கள் எல்லாமே எம்முன் தோன்றுகின்றன. வீரமும் காதலும் இந்நாவலில் மலிந்து கிடக்கின்றன. வந்தியத்தேவன், அருள்மொழிவர்மன், ஆதித்தகரிகாலன், கந்தமாறன் போன்ற இளவீரர்களும் பழுவேட்டரையர்கள், கொடும்பாளூர் வேளாளர், திருக்கோவலூர் மலையமான்முதலியமுதிய சிங்கங்களும் வீரத்திற்கு உதாரணமாகத் திகழ்கிறார்கள். மேலும் வேலும் வாளும் ஏந்திய அந்த மாபெரும் தமிழர் சைன்யத்தின் வீரமும் ஆங்காங்கே விளக்கப்படுகின்றன அடுத்து அருள்மொழி வர்மனுக்கும் வானதிக்கும் இடையிலான அன்பு, வந்தியத்தேவனுக்கும் குந்தவைக்கும் இடையில் மலரும் கடமையுணர்ச்சியுடன் கூடிய காதல், பூங்குழலியினதும் சேந்தன் அமுதனதும் விசித்திரமான காதல் என்பவை காதல் ஓவியங்களாகத் திகழ்கின்றன. காதலைப் பற்றி எழுதும்போது, கல்கி இளமையின் அழகை உணர்வு பூர்வமாக ஆனல் தூய்மையாகக் கையாண்டிருப்பது மெச்சத் தக்கது.

இந்நாவலில் குந்தவை பூங்குழலி ஆகிய பெண் பாத்திரங்கள் பெண்மையின் பெருமையைச் சித்திரிப்பதாக அமைகின்றன. மிகுந்த மனவலிமை படைத்தவளாகக் குந்தவை விளங்குகிறாள். [illegible] அடுத்ததாக உடல் வலிமை படைத்தவளாகப் பூங்குழலி காணப்படுகின்[illegible]ருள் மீனின் முள்ளைக் கொண்டு பல கொடிய விலங்குகளைக் கொல்வதும் இலங்கைக்குத் தனியே படகோட்டிச் செல்வதும் இவளது வலிமையை எடுத்துக் காட்டுகின்றன.

பொன்னியின் செல்வனில் ஒற்றுடலுக்கு இலக்கணமாக ஆழ்வார்க்கடியான் நம்பி எனும் பாத்திரம் காணப்படுகிறது. நாடெங்கும் சஞ்சரித்துத்திரியும் இந்த நம்பியினது திறமையும் நுணுக்கமாக விளக்கப்பட்டிருக்கிறது. மர்மங்கள் நம்பியின் முன்னே வெளிச்சமாகின்றன. சந்தர்ப்பத்திற்கேற்ப நடித்துக்கொள்வதில் கல்கியின் கதாநாயகனும் முக்கிய பங்குவகிக்கிறன்.

மேலும் பண்டைய போர்முறைகள், மருத்துவமுறைகள், ஆலயங்கள், போக்குவரத்து முறைகள், வீதிகள், கணித அளவீடுகள் ஆகியவற்றைப் பற்றியும் நாவலின் போக்கில் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு நாவல் பற்றிய மதிப்பீட்டின் அதன் குறைகளும் சுட்டிக்காட்டப்படவேண்டும். ஆயின் 'பொன்னியின் செல்வனில்' என்னகுறை இருக்கிறது எனக்கண்டறிவது பெருங்கஷ்டமாகும் எனினும் ஒரு குறை நியாயமானதாக இருக்கின்றது. அதாவது பண்டைய நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் [illegible] இதில் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் வர்ணிக்கப்பட்ட[illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

நகைச்சுவை நவீனம்

# வடக்கே போகும் ராமனுஜம்

★ திக்கவயல் ★

நேரம் போய்க் கொண்டிருந்தது மீண்டும் ஜனங்கள் மத்தியிலே சலசலப்பு.

'கேட்டிப்பர்' கேட்டைத் திறக்கப்போகிறாராம்? கேட் அரைகுறையாகத் திறந்தது.

இரண்டொருவர் இந்த இடையிலே புகுந்து விட்டனர்.

இருபத்து ஐந்து ரூபாச் சந்தோஷம் கொடுத்து அவர்கள் சென்றுவிட்டதாக முன் கியூவரிசை கதைத்துக் கொண்டது.

ஒரு ஆளுக்கு இருபத்து ஐந்து என்றால், பெருக்கிப் பார்த்தால் எப்படி இருக்கும்?......இப்படியும் ஒரு விமர்சனம் கியூவரிசையில் கேட்டது.

இருநூற்றுக்கு மேற்பட்ட புதிய பிரயாணிகள் கேட்டைத்தாண்டி விட்டார்கள்.

இலங்கேசனும் கேட்டைத் தாண்டிச் சுங்கத் திணைக்களத்திற்குள் வந்துவிட்டான்

அவனின் பெட்டியை நாலாம் இலக்கக் 'கஸ்டம்ஸ்' அதிகாரி பரிசோதித்துக் கொண்டு இருந்தார்.

சோதனை என்ற உலைக்களத்தில் இட்ட அந்த அதிகாரி இவ்வளவையும் இந்தியா கொண்டு செல்ல முடியாது எனச் சில வெளிநாட்டுத் துணிகளை வெளியே தூக்கி வைத்தார்.

போர்ட்டரும் சுங்க அதிகாரியும் கண்ணாலும் கையாலும் ஏதோகதைத்தனர்.

வெற்றி என்ற அர்த்தத்தில் [illegible] விரல் [illegible] காட்டி ஏதோ சொன்னார் போர்ட்டர். அத்துடன் சில திருத்தங்களுடன் மூன்று விரல்களைக் 'கஸ்டம்ஸ்' அதிகாரி காட்டினர்

பெட்டிக்கு வெளியே தூக்கி எறியப்பட்ட பொருள்கள் மீண்டும் பெட்டிக்குள் போட்டு அடையப்பட்டன.

போர்ட்டர் முன்னல் போக இலங்கேசன் பின்னல் சென்று கொண்டிருந்தான். கஸ்டம்ஸ் சோதனை முடிந்து வெளியே போகும் சமயம் குறுக்கே காலினைக் கொடுத்து இலங்கேசனை நிற்பாட்டினர் ஒரு 'காரிட்'

'எடு பத்து ரூபா?' என்றார் அவர்.

ஏதோ தனது வீட்டுப் பணத்தினைக் கேட்பது போன்று அவர் கேட்டார். எரிச்சலுடன் ஒரு இருபது ரூபா நோட்டை எடுத்துக் கொடுத்தான் அவன்.

மிகுதிக்காசு தருவான் என நினைத்து இருந்த இலங்கேசனுக்கு ஏமாற்றம் காத்திருந்தது

மனிதனே மனிதனின் முதல் எதிரி.

அவன் மனதிற்குள் கறுவிக் கொண்டான்.

இதற்கிடையில்'வாங்க வாங்க காலைத்தாங்க நேரம் போகுது' என இழுத்துச் சென்றார் போர்ட்டர்.

இலங்கேசனின் பொருட்களை அவனிடமே கொடுத்த 'போர்ட்டர்' மூன்று என்பதற்கு முன்னூறு ரூபாய் அர்த்தம் கற்பித்து தனது கூலியாகவும் இருபத்து ஐந்து சேர்த்து மொத்தமாக முன்னூற்று இருபத்து ஐந்து வசூலித்துக்கொண்டான்.

நாம் ஆடுவதும் பாடுவதும் காசுக்கு என்ற பாட்டின் ரீங்கார ஒலிகள் இப்போது இலங்கேசனுக்கு மனத்திற்குள் கேட்டன.

இப்போது இலங்கேசன் பெட்டியுடன் கப்பலுக்கு அண்மையில் சென்று விட்டான்.

அப்போது 'டோக்கன் துண்டு' கொண்டு வந்தாயா என்று கேட்டார் ஓர் அதிகாரி.

உண்மையில் இலங்கேசன் அதை எங்கோ தொலைத்துவிட்டான்

அதனல் என்ன இதோ இருபது என்று எடுத்து நீட்டினன் இலங்கேசன். புன்னகைத்த அதிகாரி இலங்கேசனைக் கப்பலுக்குள் ஏற அனுமதித்தார்

தலைமன்னரில் கப்பலுக்குள் ஏறமாத்திரம் 7 பேருக்கு லஞ்சம் கொடுத்து இருந்தான் இலங்கேஸ்.

நாம் பெற்ற சுதந்திரத்தின் அளவுகோல் இப்போது கண்முன்னல் இலங்கேசனுக்கும் புரிந்தது.

ஸ்ரீலங்காவின் தேசியக் கொடி கப்பலில் பறந்து கொண்டிருந்தது.

கப்பலில் ஏறிய இலங்கேசனின் பாஸ்போர்ட்டை அதிகாரி கேட்டார்.

பாஸ்போர்ட்டில் அவன் தலைமன்னரை விட்டு வெளியேறும் சீல் அடிக்கப்பட்டது.

நேரம் போய்க்கொண்டிருந்தது. கப்பலுக்குப் பக்கத்தே நின்று'போம்' ஏதோ ஏதோ நிரப்புவதும் தமது பயணப் பொதியை இழுப்பதுமாகச் சிலர் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

கப்பலில் என்ஜின் தன்னைத்தானே சூடாக்கிக் கொண்டிருந்தது.

கப்பலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த கயிறுகள் ஒன்றன் பின் ஒன்றாக அவிழ்க்கப்பட்டன.

கப்பல் நிறைந்து விட்டது.

ஏமாற்றம் அடைந்த பல பயணிகள் கப்பல் போகும் திசையையே நோக்கிக் கொண்டிருந்தார்கள்

'வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும் தாரணி மௌலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் களத்தே போட்டு வெறுங் கையோடு இலங்கை புக்கிய 'இராவணன் நிலைபோன்று அவர்கள் நிலையும் காணப்பட்டது.

அடகு வைத்து வியாபாரம் செய்யும் எத்தனையோ பெண்களும் கப்பலை நோக்கி வெறித்துப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தனர்.

அன்று காலையே கறுப்பு மார்க்கெட்டில் டிக்கட் எடுத்த காற்சட்டைக்காரர்சிலரும்கைபிசைந்து நின்று கொண்டிருந்தனர்.

கப்பலில் இருந்து இறங்கிய சில சுங்கத் திணைக்கள அதிகாரிகளும் தம் வழியே சென்றுகொண்டிருந்தார்கள்.

கப்பல் ஓடிக்கொண்டிருந்தது; இராமேஸ்வரம் நோக்கி!

(தொடரும்)

ஸ்கன்டினேவியாவின் புரட்சித் தலைவர் பால்மே

# விடுதலை இயக்கங்களை ஆதரித்ததால் கொலையுண்டாரா?

சுந்தரனார்

ஓலாவ் பால்மேயைக் கொலை செய்வதன் மூலம் அவருடைய இலட்சியங்களை அழித்துவிட முடியுமா?

அணிசேராக் கொள்கையை ஆதரிப்பவர்கள், இனவெறியைக் கண்டிப்பவர்கள், விடுதலை நாடி நிற்பவர்கள் — இப்படியானவர்களைப் பார்த்துத் தான் துப்பாக்கி ரவைகள் பாய்கின்றன.

பால்மே - சினிமா பார்த்துவிட்டு மனைவியுடன் வீதிவழியே மெய்ப்பாதுகாவலர் எவரும் இன்றி நடந்து வரும் போது சுடப்பட்டு இறந்துள்ளார். இந்தக் கொலையின் பின்னணியில் யார் உளர் என்பதைக் கண்டறிந்தாக வேண்டும்.

54 வயதுடைய பால்மே சுவீடன் நாட்டின் நாலாவது பிரதமராக நாலாவது தடவையாக 1985 இல் தெரிவு செய்யப்பட்டார்.

1960 இல் வியட்னும் போருக்கு எதிராக நடைபெற்ற அணி குப்பில் பங்கு பற்றியதன் மூலம் அமெரிக்காவின் சீற்றத்துக்கு ஆளானுர்.

1968 இல் வடவியட்னுமில் அமெரிக்கா போர்க்குண்டுகளை வானத்தில் இருந்து பொழிந்ததை வன்மையாகக் கண்டித்தவர். இனவெறியன் ஹிட்லர் செய்த கொடுமைகளுக்கு இது ஒப்பாகும் என்று வர்ணித்தார். இதனல் அமெரிக்கா பதற்றம் அடைந்தது.

பிரதமராக இருந்து கொண்டு இவ்வாறு கருத்து வெளியிட்டதால்

தேன்கூடு

அமெரிக்கா சுவீடனில் இருந்து தனது தூதரை வாபஸ் பெற்றது

விடுதலை இயக்கங்களை ஆதரித்தவர் பால்மே. பி. எல். ஓ இயக்கத் தலைவர் யாசர் அரபாத்தை 1970 இல் அல்ஜீரியாவில் சந்தித்தார்.

ஒராண்டின் பின்னர் கியூபா நாட்டில் பிடல் கஸ்ரோவுடன் ஒரே மேடையில் தோன்றி உரையாற்றியவர். இவற்றின் மூலம் மேலை நாடுகளில் சலசலப்பை ஏற்படுத்தியவர்.

விடுதலை பெற்ற வியட்னுமின் அபிவிருத்திக்குத் தொடர்ச்சியாகக் கணிசமான பொருளாதார உதவியை வழங்கியவர்.

இனவெறியைக் கண்டித்த ஸ்கண்டிநேவிய புரட்சித் தலைவர் பால்மே தென்னுபிரிக்க நாட்டில் தலைவிரித்தாடும் இன ஒதுக்கலை வன்மையாக எதிர்த்தவர். இறப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்னர் கூட ஸ்டொக்ஹோம் மாநாட்டில் இனவெறிக்கு எதிராகக் குரல் கொடுத்தவர். தென்னுபிரிக்க நாட்டுக்கு எதிராகக் கடும் பொருளாதாரத் தடை வேண்டும் என்று வலியுறுத்தியவர்.

சர்வதேச ஆயுத ஒழிப்பு, பாதுகாப்பு ஆணைக்குழுவின் தலைவராக அரும்பணி புரிந்தார். இவ்வாணைக்குழுவில் இவர் துணிச்சலுடன் காரியம் பார்த்ததால், இவ்வாணைக்குழுவைப் பால்மே கமிஷன் என்று அழைத்தனர்.

சர்வதேச [illegible] அணுவாயுதத் [illegible] விண்வெளிக்கு ஆயுதப் போட்டியை எடுத்துப்

### ஐக்கியங்கள்

இலாபத்தின்
அடைவுகளிலே
ஐக்கியங்கள்...
கூட்டாளிகளாகி
குதூகலிக்கும்.
பின்...
பங்கீடுகள் என்ற
பயன்பிரிப்பில்
அவை...
பதங்கெட்டு
அணிதிரட்டும்

- (புகன்) -

செல்லாமை மாறுபட்ட கலாசாரங்கள், முரண்பட்ட கருத்து நிலைகளின் சகவாழ்வு - இவை இவ்வாணைக்குழுவின் சிபார்சுகளாக அமைய பால்மேயின் தலைமைத்துவம் பங்களித்தது.

"மக்கள் தொகை குறைந்த சிறுபான்மை" நாடுகளிடமே அணுவாயுதங்கள் உண்டு. ஆனல் இவற்றைப் பாவித்தால் உலகில் பெரும்பான்மை மக்கள் அழிந்துபோவார்கள். எனவே இவற்றைக் கண்டிக்கும் உரிமையும் கடமையும் நமக்கு உண்டு." — என்பது பால்மேயின் வாதம்.

பால்மேயின் மறைவால் ஏற்பட்டுள்ள வெறுமையை நிரப்புவது எளிதல்ல ஒடுக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்கும் நாட்டமும், அறிவு நுட்பமும் துணிச்சலும், [illegible] டும் நாம் பெறுவது சுலபமான காரியமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையை நிர்வகிக்கும் மங்கையர்:

## அவர்கள் பணியும் முகாமைத்துவமே

உலகில் முதல் முகாமையாளர்கள் மங்கையர்கள் அல்லவா? வீட்டினை அலங்கரிப்பது, செலவுகளைத் திட்டமிடுவது, சமைப்பது, உறவினருடன் தொடர்பு - இப்படி அனைத்தும் முகாமைத்துவம் தானே.

வீட்டு வாழ்க்கையை இதந்தரும் பணியாக அமைப்பது சுலபமான காரியமல்ல அதுவும் தொழிலுக்குச் செல்லும் பெண்களுக்கு இது ஒரு சவாலாக அமைந்து விடுகிறது.

இந்தியாவில் காந்திய இயக்கம் காரணமாகப் பெண்களின் சமூக நிலை உயர்ந்தது என்பார்கள். காந்தி அடிகள் தனது போராட்டத்தில் பெண்களையும் இணைத்துக் கொண்ட காரணத்தால், சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் பெண்களை ஏற்கும் நிலை உருவாகியது.

வர்த்தக நிறுவனத் துறையில் ஆளணிப்பிரிவுகளில் பெண்கள் உத்தியோகம் பெற்றனவு, நுகர்ச்சி சந்தைப்படுத்தல் பிரிவில் தொழில் பெறவில்லை காரணம் இத்தொழிலில் பயணஞ் செய்ய வேண்டிய நிலை உண்டு என்பதால் விளம்பரப்படுத்தல் பிரிவும் பெண்களுக்கு ஆரம்ப காலத்திலேயே தொழில் வாய்ப்பு வழங்கி உள்ளது

முகாமைத்துவத் துறையில் மங்கையர் முன்னேற்றத்துக்கு உள்ள தடைகள் என்ன? சமூக கண்ணோட்டம் இங்கு தேவைப்படுகிறது. ஆண் குழந்தை வளர்ந்து தன்னையும் தனது குடும்பத்தாரையும் பராமரிக்க வேண்டும். ஆனால் பெண் குழந்தை வளர்ந்து, ஈற்றில், பிறரால், (முதல் பெற்றோர் பின் சகோதரர்கள், கணவன் ஆகியோரால்) பராமரிக்கப்பட வேண்டியவர். இதுவே சமூகக் கருத்து நிலை.

இக்கருத்து நிலை காரணமாகப் பெரும்பாலும் பெண்களுக்கு வழங்கப்படும் கல்வியும் அப்படி அமைந்து விடுகிறது

தொழில் பெற்றாலும் கூட, அவர்கள் திருமணம் முடியும் வரை தற்காலிகமாகப் பதவியில் இருக்கிறார்கள். பின்னர் விட்டுச் சென்று விடுவார்கள் என்ற கருத்து நிலையும் இருக்கத்தான் செய்கிறது.

ஆண்களுக்காக ஆண்களால் உருவாக்கப்பட்ட ஆண்கள் உலகில் வாழப் பெண்கள் பயின்று விட்டனர் - என்பார் லென் அன்டேர்சன். தொழில் பார்க்கும் பெண் இரு வகையான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். தொழில் தொடர்பான போட்டி நிலவும் உலகு ஒன்று. துணைவருடன் சேர்ந்து வீட்டு வாழ்க்கையை நிர்வகிப்பது மற்றையது

தொழில் பார்க்கும் பெண்களுக்கு குழந்தை பிறந்ததும் புதிய பிரச்சினை உருவாகிறது. வீட்டில் முதியவர்கள் இருப்பின் அல்லது நல்ல சேவகர்கள் கிடைப்பின் இப்பிரச்சினை ஒருவாறு தீரலாம் இருப்பினும் தாயின் அரவணைப்புக் குறைவினால் ஏற்படும் உளவியல் பிரச்சினையும் இருக்கத்தான் செய்கிறது.

சில சூழ்நிலைகளில் முதல் மூன்று ஆண்டுகள் தொழிலை விட்டுக் குழந்தைகளைப் பராமரித்து விட்டுப் பின்னர் தொழிலைப் பெண்கள் தொடர்ந்த சூழ்நிலைகளும் இருக்கத்தான் செய்கின்றன.

### இரக்கசிந்தையும் புரிந்துணர்வும் ஆளுமையை மேலும் உயர்த்துகிறது

அறிவுத் துறையில் ஆண்கள் பெண்களிலும் சிறந்தவர்கள், உணர்ச்சி ரீதியாகவும் பெண்களிலும் பார்க்க ஆண்கள் சமநிலை உடையவர்கள், தொழிலைப் பற்றி ஆண்கள் கூடிய சிரத்தை உடையவர்கள், பெண்கள் தாமாகவே சிந்தித்து முடிவினை மேற்கொள்ள முடியாதவர்கள் — இப்படிப் பல தப்பபிப்பிராயங்கள் சமூகத்தில் நிலவுகின்றன

ஒரு பெண் அதிகாரிக்குக் கீழ் கடமை புரிவதா என்ற மனோபாவமும் சில வேளைகளில் ஆண்கள் மத்தியில் நிலவுகிறது.

மக்களுடன் தொடர்பு கொள்ளும்போது பெண்கள் பிரச்சினைகளை அவற்றின் அடிப்படையை நன்கு புரிந்து கொள்கிறார்கள்; இரக்க சிந்தையுடன் அணுகிச் செய்கிறார்கள், நல்ல புரிந்துணர்வை உருவாக்குகின்றனர்.

பெண்களும் ஆண்களும் ஒருவருக்கொருவர் சவால் அல்ல. ஆனால் அவர்கள் தனிவாழ்விலும், தொழில் வாழ்விலும், சமூக வாழ்விலும் நல்ல பங்காளிகளாகச் செயற்பட வேண்டும்.

(ஆதாரம்: ஹிந்து)

## பொன்மொழிகளில் பெண்மணிகள்

- பெண்களால் அன்பைப் பிரிக்கமுடியாது -காந்திஜி-
- கன்னிப்பெண்களின் அழகு உலகில் எல்லா சிபாரிசுக் கடிதங்களையும் விட வலிமையானது. -அரிஸ்டாட்டல்-
- மதப்பற்று இல்லாத அழகிய பெண்கள் வாசனை இல்லாத மலர் போன்றவர்கள். -ஹீன்-
- மடிந்துபோன இதயங்களிற்கு உயிரூட்டுபவள் பெண்.
- வாழ்க்கையில் உள்ள தூயவை மதம் பற்றிறவை என்பவற்றிற்கு உறைவிடம் பெண்களே -மகாத்மா காந்தி-

தொகுப்பு—சிவமலர் செல்லத்துரை,புங்குடுதீவு

# நங்கை

# சிறுவர் கடை

## 'மழலைத் தேன்மழை'



—இ. உமாராணி—

கண்ணே கண்மணியே வா வா வா
கற்கண்டு முத்தம் தா தா தா
பொன்னே பொருளே வா வா வா
பொழிவது மழலைத் தேன்மழையோ!
கனியே அமுதச் சர்க்கரையே
கனிவாய் இனிக்கும் முத்தம் தா!
விண்ணே படைத்த அமுதமே
கண் வளராய் கண்ணே தாலேலோ

## உண்மை நட்பு

உமாவும் ராணியும் சிநேகிதிகள் இருவரும் ஒரே வகுப்பில் படிக்கின்றார்கள் ஒருநாள் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்கு வரும் வழியில் விளையாடப் போனார்கள்.

அவர்கள் விளையாடிய இடம் ஒரு கடற்கரை. அங்கு மணல் அதிகமாக இருக்கவே உமாவுக்கு நெடுநேரம் விளையாட ஆசையாக இருந்தது.

ஆனால் ராணியோ 'இனி விளையாடியது போதும் வீட்டுக்குப் போவோம்' என்றாள். 'இன்னும் கொஞ்சநேரம் விளையாடலாமடி' என்று உமா சொல்ல அவளும் சம்மதித்தாள்.

இரண்டு பேரும் மாலை வரை விளையாடினார்கள். மண் விளையாட்டில் ராணியின் மோதிரம் எங்கோ மண்ணுக்குள் விழுந்து விட்டது.

முடிந்த மட்டும் தேடிப் பார்த்தும் அது கிடைக்கவில்லை அழுதபடியே வீடு வந்து சேர்ந்தனர்.

விஷயமறிந்த ராணியின் தாயார் அவளை ஏசியும் பேசியும் கோபித்துக் கொண்டாள்.

உமாவோ மறுநாட் காலை விடிந்ததும் விடியாததுமாகக் கடற்கரைக்கு ஓடோடிச் சென்று மோதிரத்தைத் தேடினாள். அவள் தேடியது வீண் போகவில்லை.

மணலுக்குள் மறைந்து கிடந்த மோதிரம் அவளது கண்களுக்குப் பளிச் சென்று பட்டது.

அதை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்ட உமா ஓடோடிச் சென்று ராணியின் கையில் கொடுத்தாள்.

அவளது முகம் ஆச்சரியத்தால் மலர்ந்தது. உடனே அவளைத் தழுவிக் கொண்டாள். 'அடி உமா! நீதான் உண்மையான சிநேகிதி.' என்று கூறினாள்.

இ. ஸ்ரீதரன்

## பத்துக் கேள்விகள் பதில் தெரியுமா?

1 பூமியிலிருந்து சந்திரனின் தூரம் உத்தேசமாக எவ்வளவு மைல்கள்?

2 விக்டோரியா நீர் வீழ்ச்சி எந்த நதியில் ஏற்படுகிறது?

3 அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் கையொப்பமான ஆண்டு எது?

4. ஐரோப்பாவின் மிக நீளமான நதி எது?

5. உலகின் தெற்கு முனைக்கு முதலில் போனவர் யார்?

6. 'நோபல் பரிசு'— இதனை ஏற்படுத்தியவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

7. சூரியனைச் சுற்றி வரும் கிரகங்கள் எத்தனை? பெயர் குறிப்பிட முடியுமா?

8. பூனைக்கு எத்தனை விரல்கள்?

9. மின்சாரத்தை அளக்க 'வோல்ட்' என்கிறோம். இப்பெயர் எப்படி வந்தது?

10. உலோகங்கள் மிக இலேசானது எது?

விடை

1. 2,37,500 மைல்கள்
2. ஸாம்பஸி நதியில்
3. 1776
4. வொல்கா நதி
5. அமுட்ஸன்
6. சுவிடன்
7. ஒன்பது

பெயர்கள்:- பூமி, மெர்க்குரி, வீனஸ், புளூட்டோ, சாட்டின், மார்ஸ், ஜூபிடர், யுரானஸ் நெப்டியூன்.

8. பதினெட்டு - முன் காலில் ஐவைந்து; பின் காலில் நன்நான்கு

9. 18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு இத்தாலிய விஞ்ஞானி கவுண்ட் ஒல்டா என்பவரின் நினைவாக

10. லித்தியம் -(Lithium)

-த. செந்தில் குமரன் -யாழ் இந்துக்கல்லூரி மாணவன்

## வேற்றுமையில் ஒற்றுமை

பாலைக் குடித்துப் பதுங்கி வாழும்
பஞ்சு மேனிப் பூனையார்
வாலை ஆட்டிச் சோறு தின்று
பெரிய பூனை ஆயினர்
காலைக் காலைச் சுற்றி வரும்
கண்ணைப் பறிக்கும் அழகுதான்
ஓலைக் குடிசை தன்னிலே
குட்டி தன்னைப் போட்டதாம்

சாம்பல் குட்டி ஒன்றுடன்
சந்தனக் நிறமும் வந்ததாம்
சோம்பல் விடுத்து அவைகளும்
சுறுசுறுப்பாய் விளையாடின
வீம்பு ஏதும் இன்றியே
இன்பமாக வாழ்ந்தன
நாம் படிக்க வேண்டுமே
நல்ல பாடம் அதனிடம்

கும்மா கும்மா குட்டிகள்
சண்டை யிட்டுக் கொள்ளினும்
அம்மா என்ற சொல்லிலே
அமைதியாக வாழ்ந்தன
வேற்றுமை நிறமாகினும்
ஒற்றுமையாய் வாழ்ந்தன
ஒற்றுமையே பலமென
உறுதி செய்து நின்றன.

செல்வி ச. அருந்ததி
இந்துக் கல்லூரி, சாவகச்சேரி

## பெண் ஒளிப்பதிவாளரின் கமரா திரையில் கண் சிமிட்டுகிறது

தமிழ்த் திரையுலகின் இளம் பெண் ஒளிப்பதிவாளர் பி ஆர். விஜயலட்சுமி. அசோக்குமாரின் சிஷ்யை இவர்.

திரையில் இவரின் கெமரா கண் சிமிட்டத் தொடங்கியுள்ளது

கெமரா மீது தமக்கு எப்படி நாட்டம் ஏற்பட்டது என்பது பற்றி அவரே சொல்கிறார்:

'என்னுடைய சொந்த விருப்பத்தின் பேரில் நான் கெமரா கற்றுக் கொள்ளவரவில்லை. என் அண்ணாதான் இந்த யோசனையைக் கூறி, அசோக்குமாரிடம் சேர்த்து விட்டார்.

ஆரம்பத்தில் ஈடுபாடு இல்லாமல் வேலை செய்து கொண்டிருந்தேன். நாள் செல்லச் செல்ல என்னை அறியாமலேயே அதில் ஈடுபாடு ஏற்பட்டது.

'முந்தானை முடிச்சு' படத்திற்குப் பிறகு கெமராவில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தேன். தனியாக கெமராவை கையாளும் வாய்ப்பு கிடைத்தது. அதன் 'ரிசல்ட்' சிறப்பாக வரவே மனதுக்குள் தெம்பு வந்தது

முதல் படமான 'சின்ன வீடு' படத்தில் எனது முழுத் திறமையையும் காட்ட முடியாமல் போய் விட்டது.

படம் முழுவதும் வீட்டிற்குள்ளேயே கதை நடப்பதாக அமைந்து விட்டபடியால் கெமரா என்று குறிப்பிடும்படியாக செய்ய முடியாமல் போய்விட்டது.

வெளிப்புறக் காட்சிகளில் தான் கெமரா மேனின் திறமை பளிச்சிடும்' என்றார்.

## சிந்தனை ஏனோ?



பூர்ணிமா பாக்கியராஜ் எப்பொழுதும் ஒரே சிந்தனையுடனும் குழப்பத்துடனும் காணப்படுவதாக சினிமா வட்டாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது.

அதேசமயம் பாக்கியராஜ் ரயில் நடிகையை அடிக்கடி ஹோட்டலில் சந்திப்பதாகவும் - ஹோட்டலில் 'சின்னவீடு' ஒன்றையே வைத்துள்ளதாகவும் பேச்சடிபடுகிறது.

'சின்னவீடு' படத்தைத் தொடர்ந்து பாக்கியராஜுக்கும் 'சின்னவீடு' எண்ணம் வந்து விட்டது போலும்.

பூர்ணிமாவின் சிந்தனைக்கும் குழப்பத்துக்கும் காரணம் இதுதானோ?

## என்றும் பதினாறு வயது பதினாறு

ஹொலிவூட் திரையுலகைத் தினறடித்தவர் நடிகை மே வேஸ்ட். அங்கங்களின் தெளிவு களிவுகளை திரையில் பளிச்செல காட்டிவிடுவார் அவர்.

மே வேஸ்ட் ஷூட்டிங்கிற்கு வருகிறார் என்றால் ஸ்டுடியோ கதி கலங்கும். டைரக்டர், தயாரிப்பாளர் முதல் அனைவருமே கதி கலங்கி நிற்பார்கள்.

அவர் நடித்த படங்கள் 'ஓகோ' எனஓடின. காரணம்படத்தில் முழுக்க முழுக்க கவர்ச்சிக் காட்சிகள் தான்.

அவர் யாரையும் மதிப்பதில்லை. தயாரிப்பாளருக்கும் டைரக்டருக்கும் படக் காட்சிகளை எப்படி எடுக்க வேண்டும் என்பதை அவரே சொல்வார். அதன்படி நடக்கவும் வேண்டும். அந்தளவு கர்வம் பிடித்தவர்

ஆனாலும் அவர்களும் இவரை விட்டபாடில்லை. அவரை விட்டால் கவர்ச்சிக்கு எங்கே போவது?

அவர் நடித்த படங்கள் வெளியானால், ரசிகர் கூட்டம் அலைமோதும். இப்படி ரசிகர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட மே வேஸ்ட்டின் வயது என்ன தெரியுமா? பதினாறு என்று சொல்லலாம் என்று தோன்றுகிறதா?

அதிர்ச்சி அடைந்து விடாதீர்கள். அவருக்கு வயது 76. அந்த வயதிலும் திரையில் பதினாறு வயது கட்டிளம் கன்னியாகவே காட்சியளித்தார் அவர்.

— பிஸ்கின்

## கமலின் பாடல்!

"நிலவு தூங்கும் நேரம் நினைவு தூங்கிடாது"

இந்தப் பாடல் உங்களுக்கு விருப்பமான பாடலாக இருக்கலாம்.

ஆனால் காதல் இளவரசன் கமலின் விருப்பமான பாடல் ...... [illegible]

'என்னடி முனியம்மா உன் கண்ணிலே மையி...'

# வெள்ளித் திரை

தயாரிப்பு: பேரின்பம்

# மோகனின் கைமூட்டு விலகியது எனினும் தொடர்ந்து நடித்தார்

அண்மையில் படப்பிடிப்பின்போது மோகனின் வலது கைமூட்டு விலகியது. எனினும் தொடர்ந்து படப்பிடிப்புகளில் கலந்து கொண்டு வேதனையுடன்நடித்தார்

படப்பிடிப்பில் நடந்த அந்தச் சம்பவத்தை விளக்குகிறார் மோகன்:

'உயிரே உனக்காக' படத்திற்காக சோழவரம் பந்தய மைதானத்தில் சண்டைக்காட்சி ஒன்றில் கலந்துகொண்டு நடித்தேன்

ஒரு காட்சியில் நடித்துக்கொண்டிருந்தபோது வலது கை மூட்டு விலகி விட்டது. வேதனையோ சொல்ல முடியாது கையை இறக்கமுடியாமல் அவதிப்பட்டேன்.

இதுபோன்ற நேரங்களில், உடன் நடிக்கும் ஸ்டண்ட் நடிகர்களுக்கு, மூட்டு விலகினால் சரி செய்யும் விதம் தெரியும் ஆனால் அன்று என்னோடு நடித்தவர்களுக்குச் சிகிச்சை முறை எதுவும் தெரியாது நேரம் செல்லச் செல்ல துடித்துப் போய்விட்டேன்.

டாக்டர்களை அழைத்து வந்து கையை இறக்கிய பின்னரும் வலி இருந்தது. அதனால் ஒருகையை மட்டும் பயன்படுத்தி நடித்தேன்.

அன்று நான் அழாத குறைதான். இப்படி மூட்டு விலகியது எனக்கு முதல் முறையல்ல ஏற்கனவே இரண்டுமுறை விலகியிருக்கிறது.

அதன் பின்பு எந்தவித கடினமான வேலையும் செய்யமுடியவில்லை இது போல் [illegible] இருக்க வேண்டியிருக்கிறது.

எனக்கு ஏற்பட்ட அவதியும் வேதனையும் என் எதிரிக்குக்கூட ஏற்படக் கூடாது' என்றார்.

மோகனுக்கு மட்டுமல்ல ரஜனிகாந்த், விஜயகாந்த், கமலஹாசனுக்கும் பலமுறை மூட்டு விலகியுள்ளது.

'உயர்ந்த உள்ளம்' படத்தில் கமல் மூட்டு விலகியதால் ஒரு கையை மட்டும் பயன்படுத்தி சண்டைபோட்டு நடித்திருக்கிறார்'

## ராதாவுக்கு அடித்தது 'சான்ஸ்'

சிவகாசி ராதா ரசிகர் மன்றம் வாங்கிய லோத்தர் சீட்டுக்கு அடித்தது 'சான்ஸ்' ஒரு லட்சம் ரூபா.

அந்தப் பணத்தை என்ன செய்யலாம் என ராதாவிடம் மன்றத்தினர் ஆலோசனை கேட்டனர்.

ஏழைக் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள், உடைகள் வாங்கிக் கொடுங்கள்' என்று கூறி இருக்கிறார் ராதா.

## என்ன பார்வை உந்தன் பார்வை!

★

இந்திப் படவுலகுக்குப் போன போது எல்லோரும் சேலி செய்தீர்களே இப்பொழுது எப்படி? பம்பாயையே கலக்குக் கலக்கிக் கொண்டிருக்கிறேன்தெரியுமா? என்று பார்வையால் கேட்கிறாரோ ஸ்ரீதேவி

★



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இரசாயனம்
(க.பொ.த சாதாரணம்)

# ஆவர்த்தன அட்டவணையிற் பொதுக் கோலங்கள்

கடந்த வாரத்தில் ஆவர்த்தன அட்டவணையின் வளர்ச்சி பற்றியும், அணுக்களின் கட்டமைப்புத் தொடர்பான ஒரு பொதுக் கோலத்தையும் பார்த்தோம். இன்று வேறு சில பொதுக் கோலங்களைப் பார்ப்போம்.

அணுவாரை:- ஆவர்த்தன அட்டவணையில் ஒரு ஆவர்த்தனத்தில் இடமிருந்து வலமாக நோக்கும்போது அணுவாரையின் பெறுமானம் குறைந்து கொண்டு வருகிறது. ஆனால் கூட்டம் (viii) இல் சடுதியான அதிகரிப்புக் காணப்படுகிறது.

எடுத்துக்காட்டாக,

| Li | Be | B | C |
|---|---|---|---|
| 1 34 | 0.90 | 0 82 | 0.77 |
| N | O | F | Ne |
| 0.75 | 0 73 | 0.72 | 1.31 |

கூட்ட மொன்றில் மேலிருந்து கீழாக நோக்கும் போது அணுவாரையின் பெறுமானம் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. ஓர் அணுவின் கருவேற்றம், இலத்திரன்களின் திரையீட்டுவிளைவு என்பன அணுவாரையின் பருமனைத் தீர்மானிக்கும் காரணிகளாகும். திரையீட்டு விளைவென்பது உள்ளோட்டில் இருக்கும் இலத்திரன்களால் வெளியோட்டிலிருக்கும் இலத்திரன்கள் மீதான தள்ளுகை விசையாகும். ஓர் அணுவில் ஒடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது திரையீட்டு விளைவு அதிகரிக்கின்றது. திரையீட்டு விளைவிலும் பார்க்கக் கவர்ச்சிவிசை பெரிதாயின் அணுவாரை குறைகின்றது. ஒரு ஆவர்த்தனத்தில் கூட்ட எண் அதிகரிக்கையில் இதன் விளைவை அவதானிக்க முடிகிறது இதேபோல் கருவின் கவர்ச்சியிலும் திரையீட்டு விளைவு கூடுதலாயின் அணுவாரை அதிகரிக்கின்றது. ஒரு கூட்டத்தில் ஆவர்த்தன எண் அதிகரித்தலின் போது இதன் விளைவை அவதானிக்கின்றோம்.

அயனாக்கற்சக்தி:-

எம்மைப் பொறுத்தவரையில் முதலாம் அயனாக்கற் சக்தியையே கவனத்திற் கொள்வோம் முதலாம் அயனாக்கற் சக்தியென்பது ஒரு மூலகத்தின் வாயு நிலையிலுள்ள ஒரு மூல அணுக்கள் ஒவ்வொன்றிலிருந்தும் கடைசிச் சக்தி மட்டத்திலுள்ள ஒரு இலத்திரனை அகற்றுவதற்கு வழங்கப்படவேண்டிய சக்தியாகும். ஓர் அணுவின் கருவேற்றம், அதன் அணுவாரை ஆகியவற்றில் அயனாக்கற் சக்தி தங்கியுள்ளது. ஒரு ஆவர்த்தனத்தில் கூட்ட எண் அதிகரிக்கும்போது அயனாக்கற்சக்தி அதிகரிக்கிறது. கூட்டம் (viii) இல் சடுதியான அதிகரிப்புக் காணப்படுறது. ஒரு கூட்டத்தில் ஆவர்த்தன எண் அதிகரிக்கும் போது அயனாக்கற்சக்தி குறைகிறது.

மின்னெதிர்மை.-

ஒரு மூலகத்தின் ஓர் அணு உறுதியான சடத்துவவாயு நிலையமைப்பை பெறுவதற்கென இலத்திரனைக் கவரும் தன்மையின் அளவீடு அம்மூலகத்தின் மின்னெதிர்மை ஆகும். இதுவே ஓர் அணுவின் இலத்திரன் நாட்டமாகும்.

ஒரு ஆவர்த்தனத்தில் இடமிருந்து வலமாக செல்லும்போது மின்னெதிர்மை அதிகரிக்கின்றது. ஒரு கூட்டத்தில் மேலிருந்து கீழாகச் செல்லும்போது மின்னெதிர்மை குறைகின்றது.

அடுத்து மூலகங்களின் இயல்புகள் தொடர்பான பொதுக் கோலங்களைப் பார்ப்போம். கூட்டம் I கார உலோகக் குடும்பம் எனப்படுகின்றது இக்கூட்டத்தில் பின்வரும் பொதுக்கோலங்களைக் காணலாம்:-

1. அதிகுறைந்த அயனாக்கற் சக்தியும், அதியுயர் அணுவாரையும் உடையவை.
2. நேர்வலுவளவெண் ஒன்று கொண்டவை.
3. மின்பகுப்பின் போது கதோட்டில் படிகின்றன.
4. மேலிருந்து கீழ் செல்லும்போது தாக்குதிறன் அதிகரிக்கின்றன.
5. சாதாரண வெப்பநிலை வளிமண்டல ஒட்சிசனுடன் தீவிரமாகத் தாக்கம் புரிகின்றன இதனால் உண்டாகும் ஒட்சைட்டுக்கள் நீரில் எளிதிற் கரைந்து காரங்களைத் தருகின்றன.
6. இலீத்தியம்தவிர்ந்த ஏனைய மூலகங்கள் குளிர் நீருடன் தாக்கம் புரிந்து ஐதரசன் வாயுவை வெளியேற்றுகின்றன
7. இவை இலகுவில் இலத்திரனை இழப்பதால் சிறந்த தாழ்த்துங்கருவிகளாகும்.
8. இவற்றின் காபனேற்றுக்கள் வெப்பத்தால் பிரிகை அடைவதில்லை. இலீத்தியம் காபனேற்று மட்டும் உயர் வெப்பநிலையில் பிரிகை அடைகின்றது.
9. இவற்றின் நைத்திரேற்றுக்களை வெப்பமாக்கும்போது எளிதில் ஒட்சிசன் வாயுவை வெளிவிடுகின்றன.

மேற் கூறியவற்றிலிருந்து இக்கூட்ட உலோகங்களின் ஒத்த இயல்புகளைக் காணக்கூடியதாயுள்ளது. இவற்றுள் இலீத்தியம் மட்டும் சிறிது வேறுபட்ட இயல்பைக் காட்டுகின்றது.

அடுத்து VIIம் கூட்ட மூலகங்களாகிய புளோரின், குளோரின், புரோமின், அயடீன் ஆகியவற்றின் இயல்புகளை நோக்குவோம். இவை அனைத்தும் ஏனைய பல மூலகங்களுடன் எளிதில் சேர்ந்து சேர்வைகளை உண்டாக்குகின்றன. எனவேதான் இவற்றிற்கு அலசன்கள் (Halogens) — உப்பாக்கிகள் – என்றபெயர் வழங்கப்பட்டது. இவற்றின் இயல்புகளை நோக்குவோம்:

1. மிகச்சிறிய அணு ஆரை உடையவை.
2. மிகக் கூடிய மின்னெதிர்த்தன்மை உடையன.
3. மேலிருந்து கீழாகச் செல்லும்போது இவற்றின் அயனுகுந்தன்மை குறைகிறது; அதாவது தாக்குதிறன் குறைகிறது.
4. மேலேயுள்ள அலசன் கீழுள்ளவற்றின் ஏலட்டுக்களிலிருந்து அலசன்களை இடம் பெயர்க்கின்றன.

உதாரணமாக, ஏதாவது ஒரு புரோமைட்டுக் கரைசலினுள் அல்லது அயடைட்டுக்கரைசலினுள் குளோரின் வாயு செலுத்தப்படும் போது புரோமின் ] அயடீன் விடுவிக்கப்படுகிறது.

5. இவை அனைத்தும் சாதாரணநிலையில் ஈரணு மூலக் கூறுகளாகவே காணப்படுகின்றன.
6. மேலிருந்து கீழாகச் செல்லும் போது இவற்றின் பௌதிக நிலையிலும் நிறத்திலும் படிப்படியான மாற்றம் காணப்படுகிறது.
7. இவை சிறந்த ஒட்சியேற்றுங்கருவிகள்.
8. இவை உலோகங்களுடன் உண்டாக்குஞ் சேர்வைகள் மின்வலுச்சேர்வைகளாயும் அல்லுலோகங்களுடன் சேர்ந்து உண்டாகும் சேர்வைகள் பங்கீட்டுவலுச் சேர்வைகளாகும்.

மேலே தரப்பட்டுள்ள சில பொதுக்கோலங்கள் அலசன்குடும்ப மூலங்களின் இயல்புகளை ஞாபகத்தில் வைத்திருக்க உதவுகின்றன.

viii ம் கூட்டம் சடத்துவவாயுக்களைக் கொண்டுள்ளது. இவை அனைத்தும் ஓரணுவாயுக்களாகும் இவற்றின் அணுக்களின் கடைசிச் சக்திமட்டம் நிரம்பிய நிலையில் உள்ளன.

இங்கு தரப்பட்டவை தவிர்ந்த வேறுபொதுக் கோலங்களையும் ஆவர்த்தன அட்டவணை எமக்குத் தருகின்றது எமது தேவைக்கு இவைபோதுமானவையாகும்.

அ. சோமாஸ்கந்தன்
நல்லூர் வலய ஆசிரிய ஆலோசகர்




# கல்வி பற்றி மேலை நாட்டு மேதைகள்

மக்கள் அறியாதவற்றை அறியவைத்தல் கல்வியின் நோக்கமன்று. அவர்கள் நடத்துகொள்ளத் தெரியாததை, நடந்துகொள்ளக் கற்பிப்பதே அதன் குறிக்கோள்

ரஸ்கின் - Ruskin (1819 – 1900) ஆங்கில திறனாய்வாளர், கட்டுரையாளர், சமூக சீர்திருத்தவாதி,

கல்வி வாழ்க்கையிலேயே தொடங்குகின்றது. நாம் உணரத்தலைப்படுமுன்னரே. குணதிசயத்தின் அடிக்கல் நாட்டப் பெறுகின்றது. பின்னர் கற்பித்தல், இதனை நீக்கவோ மாற்றவோ சிறிதளவே உதவும்

அறிவில் முதலீடு செய்தல் மிகுந்த வட்டியை என்றும் தரும்.

ப்ஃறங்லின் - Franklin (1706 – 1790) அமெரிக்க அரசியல் ஞானி, நூலாசிரியர்

நேர்மையும் நீதியும் நிறைந்த உள்ளத்தால் உணர்ச்சி வசப்படாச் செயலும் அல்லன நாடா நடத்தையும் கொண்ட சுயகட்டுப்பாட்டை உங்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்தால், அவர்களின் வருங்கால வாழ்க்கையிலிருந்து துன்பங்களையும் சமுதாயத்திலிருந்து அகற்ற ஆவன செய்தவராவீர்.

டானியல் உவெப்ஸ்ரர் Daniel Webster (1782-1852) அமெரிக்கப் பேச்சாளர், அரசியல்ஞானி.

இக்கால உலகு இழைத்துள்ள குறிப்பான நோய்களை, கல்வியே குணமாக்கும். ஆனால், நோயைக் காணவிட்டால் சிகிச்சை தேவையற்றது.

ஜோன் புச்சன் – John Buchan (தோற்றம்1875) ஆங்கில நூலாசிரியர்

தவறுன சுயவிருப்புகள் மூலமின்றி, புற வழியே உலகைப் பார்த்து கற்பனை செய்யத் தூண்டுவதே, தூய்மையான அறிவின்பாற்பட்ட கல்வியின் குறிக்கோளாக அமைய வேண்டும்.

பேற்றண்ட் றசெல் – Bertrand russell (தோற்றம் 1872) ஆங்கிலத் தத்துவ மேதை.

தன் தாய்மொழியை மாணவன் நன்றாக விளங்க, பேச, வாசிக்க எழுத வைப்பதே எமது முதல் விருப்பாய் இருக்க வேண்டும்.

எச். ஜி உவெல்ஸ் – H. G. Wells (தோற்றம் 1866) ஆங்கில நாவலாசிரியர் வரலாற்று ஆசிரியர்.

க. கயிலாயநாதன்
(முதல்வர், கலாநிலையம், வட்டுக்கோட்டை
முன்னாள் ஆங்கிலப் போதனாசிரியர்)

## கலங்கி நிற்குது வீதியிலே

இன்றே......
அலை நினைத்து
உரலை இடிக்கும்
அந்தக் கூட்டம்

ஈழத்தில்......
மழலைக் குழந்தையையும்
மாதர் இனத்தையும்
கூலைக் கனுப்புது
தினமிங்கு......

கடலை விற்றவர்
கஞ்சா விற்றவர்
எல்லோரும் சீருடை
போட்ட தனுல்......

உடலை வருத்தி
உழவு செய்பவர்
சுடலை போகிறுர்
ஆயிரமாய்......

கடலை நம்பி
வாழ்ந்த குடும்பம்
கலங்கி நிற்குது
வீதியிலே......

- ஆவூர்க்குமரன்

# உவர் வலயப் பிரதேசங்களில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கை

## மிருக வளர்ப்பையும் கருத்தில் கொண்ட கலப்பு வேளாண்மை பயன்தரும்

உவர் வலயப்பகுதிகளில் தற்போது பெரும்போகப் பயிர்ச்செய்கையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கும் மற்றும் விவசாய முயற்சியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கும் இக்கட்டுரைத் தொடர் ஓர் வழிகாட்டியாக அமையுமென நம்பலாம்.

இன்றைய பகுதியில், தற்போதுள்ள நிலையில் விவசாயிகள் எவ்வாறு தங்கள் பயிர்ச்செய்கை முறைகளை மாற்றியமைத்து கூடிய இலாபம் பெற முயற்சிக்கலாம் என ஆராய்வோம். தற்போது ஏற்றிச் செல்லல், சந்தைப்படுத்தல் போன்றவற்றில் நிலவும் ஸ்திரமின்மை காரணமாக, சேமிக்க முடியாத பயிர் வகைகளைப் பெரும் நிலப் பரப்புக்களில் பயிரிடுவதனை விவசாயிகள் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். உதாரணமாக கத்தரி, தக்காளி போன்ற மரக்கறிப் பயிர்வகைகளைக் குறிப்பிடலாம்.

இன்னும் பல விவசாயிகள் தங்களது தோட்டங்களில் ஒரு நேரத்தில் ஒரு பயிர்வகையினைப் பயிரிடுவதனையே நாம் அவதானிக்கிறோம். முக்கியமாக புகையிலை, மிளகாய், வெங்காயம், மரவள்ளி போன்ற பயிர்கள் பயிரிடுவதனை நாம் காணலாம். இவற்றில் புகையிலை வெட்டிப் பதப்படுத்திப் பயன்படுத்தப்படுவதனால் சந்தைப்படுத்தலில் ஏற்படும் காலதாமதத்தினால் அவை பாதிக்கப்படப்போவதில்லை இதேபோல் மிளகாயும் பச்சையாகப் பிடுங்கி விற்பனை செய்யக்கூடியதாக இருப்பதோடு பச்சைமிளகாய்க்கு விலை குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில், அவற்றை முற்றவிட்டு முத்தை உலர்த்தி செத்தல் மிளகாயாக சேமித்து பின் அதிக விலைக்கு விற்கக்கூடிய நிலைமையும் உண்டு. இதிலும் சேதம் ஏற்படுவது தவிர்த்துக் கொள்ளலாம். இதே வேளையில் வெங்காயம், சந்தைப்படுத்தலில் காலதாமதம் ஏற்படும்போது முடிச்சுக்களாகக் கட்டி சேமிக்க முடியுமாயினும் நிறையில் வீழ்ச்சி ஏற்படுவதனால் நஷ்டமடையக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. இதே வேளையில் மரவள்ளி போன்ற பயிர்கள் முற்றாக சேமிக்க முடியாத தன்மையினைக் கொண்டிருப்பதனால், அவற்றைத் தனிப் பயிராக பெரும் நிலப்பரப்பில் நடுவதனைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

அதனால் இன்றைய நிலையில் உற்பத்திச் செலவினைக் குறைக்கவும், உற்பத்திப் பொருள்களை இலகுவில் சந்தைப்படுத்துவதற்கும் ஏற்ப, எமது பயிர்ச் செய்கை முறைகளில்கலப்புவேளாண்மை முறைகளையும், பல்லினப் பயிர்ச்செய்கை முறைகளையும் அறிமுகப்படுத்துவது நல்லது. இன்றைய பகுதியில் முக்கியமாக கலப்பு வேளாண்மை முறைபற்றி ஆராய்வோம்.

கலப்பு வேளாண்மை என்பது தமது பயிர்ச் செய்கை முறைகளில் மிருக வளர்ப்பையும் ஒன்றிணைப்பதாகும். இம்முறையில் பயிர்ச்செய்கையும் மிருக வளர்ப்பும் ஒன்றுக்கொன்று நன்மை பயக்கக்கூடியதாகஇருப்பதோடு பெறப்படும் இலாபமும் அதிகரிக்கப்படுகின்றது

(அ) சேதனப்பசளை:
பயிர்ச்செய்கையின் போது ஆரம்பத்தில் அடிக்கட்டாக இலைகுழைகளையும் எரு போன்றவற்றையும் பெருமளவில் பிரயோகிப்பதனை நீங்கள் அறிவீர்கள். இதனால் உற்பத்திச் செலவில் பெரும்பகுதி இதற்கே போவதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இதே வேளையில் கலப்பு வேளாண்மை முறையினைக் கைக்கொள்ளும்போது வளர்க்கப்படும் ஆடு, மாடு, கோழி போன்றவற்றின் கழிவுகள் தோட்டத்திற்கு அடிக்கட்டு சேதன உரமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருப்பதனால் உற்பத்திச் செலவு குறிப்பிடக்கூடிளவு குறைக்கப்படுகின்றது. அதனால் இலாபமும் அதிகரிக்கின்றது.

(ஆ) கூட்டெரு:-
ஒரு பண்ணையில் கலப்பு வேளான்மைமுறை கைக்கொள்ளப்படும்போது பயிர்க்கழிவுகளும், மிருகக் கழிவுகளும் போதியளவு காணப்படுவதனால், அவற்றைக் கலந்து தரமான கூட்டெரு தயாரிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனைக் குறுகிய நிலப்பரப்பில் கைக்கொள்ளக் கூடியதாக இருப்பதனால் இடப்பிரச்சினை எதுவும் எழா. இம் முறையிற் தரமுயர்ந்த சேதனப்பசளையினைத் தோட்டத்திற்குப் பிரயோகிக்கக் கூடியதாக இருப்பதோடு, மேலதிக பசளையை விற்பனை செய்து இலாபம் பெறக் கூடியதாகவும் இருக்கின்றது.

(இ) நிலவளம்
கலப்பு வேளாண்மையில் கால் நடைகளுக்கு வேண்டிய புல்லைப் பெறுவதற்கு தோட்டத்தின் ஒரு பகுதியில் வெட்டுப் புற்களை வளர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு புல் தரையில் வளர்க்கப்படும்போது நிலம் ஆறவிப்படுவதனால் அதன் வளம் அதிகரிக்கின்றது இப்புற்றரை வளர்க்கப்படும் நிலப்பரப்பை இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை தோட்டத்தின் மற்றொரு பகுதிக்கு மாற்றிக்கொள்ளல் வேண்டும். இவ்வாறு இருவருடங்களுக்கு ஒருமுறை மாற்றிமாற்றி புற்றரையை தோட்டத்தின் [illegible] அமைத்துக்கொள்வத [illegible] தோட்டத்தின் வளம் எப்பொழுதும் உயர்ந்த நிலையில் பேணப்படுகிறது

(ஈ) மிருக உணவு:
கலப்பு வேளான்மை முறை கைக்கொள்ளப்படும்போது தாவரக் கழிவுகள் மிருக உணவாகப் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதனால், மிருக வளர்ப்புக்கு ஏற்படும் செலவு பெருமளவு குறைக்கப்படுகின்றது. தாவரக் கழிவுகளாக நெல், சோளம், இறுங்கு, குரக்கன் போன்றவற்றின் வைக்கோலைக் குறிப்பிடலாம்.

(உ) தோட்டவேலைகள்:
கலப்பு வேளாண்மை முறையில் வளர்க்கப்படும் மிருகங்களை தோட்ட வேலைகளில் பெருமளவு பயன்படுத்தலாம். உதாரணமாக உழுதல், நீர் இறைத்தல், வண்டி இழுத்தல் போன்றதொழில்களுக்கு பயன்படுத்தப்படும்போது பயிர் உற்பத்திச் செலவு குறைக்கப்படுவதோடு. மற்றையோர் வேலைகளுக்கும் இவற்றைப் பயன்படுத்தி வருவாய் பெறக்கூடியதாகவும் இருக்கின்றது.

(ஊ) பூரணஉணவு:
மேற்குறிப்பிட்ட அம்சங்களை விட முக்கியமாககலப்புவேளாண்மை முறையில் குறைந்த செலவில் நிறைந்த பூரண உணவை உண்ணக்கூடிய [illegible] றது. அதாவது, இம்முறையில் [illegible] ல், இறைச்சி என்பன பண்ணையிலேயே மலிவாப் போதியளவில் கிடைப்பதனால், விவசாயிகள் சத்து நிறைந்த, அத்தியாவசியமான மிருக புரதத்தினை உணவில் சேர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

### கமமும் புலமும்

(எ) மிருக உற்பத்தி அறிவிப்பு:
கடந்த சில காலங்களாக கடல் உற்பத்திப் பொருட்களான மீன், இறுல், நண்டு, கணவாய் போன்றவற்றுக்கு தட்டுப்பாடு நிலவி வருவதனால், இறைச்சிக்காகக் கொல்லப்பட்டு வரும் மாடு, ஆடு, கோழி எண்ணிக்கை அதிகரித்து வருவதனை நாம் அவதானிக்கலாம். கொல்லப்படும் எண்ணிக்கைக்கு ஏற்ப இவற்றின் உற்பத்தி அதிகரிக்கப்படவில்லையென நாம் நிச்சயமாக நம்பலாம். இதனை நிவர்த்தி செய்வதற்காக கலப்பு வேளாண்மை முறையில் பயிர்ச் செய்கையுடன் மிருக வளர்ப்பையும் ஒன்றிணைத்து இவற்றின் உற்பத்தியை அதிகரிக்க முன்வரல் வேண்டும்.

இவ்வாறாக பலவித நன்மைகள் காணப்படுவதனால் கலப்பு வேளாண்மை முறையை நாம் கைக்கொண்டு பொருளாதார ரீதியில் பெரும் இலாபம் பெறுவதோடு நோய் பிணியற்ற வலுமிக்க சமுதாயத்தினை உருவாக்கவும் வழிவகுப்போம்.

- பொ- சுந்தரானந்தா -
விவசாய ஆலோசகர்




## வயலுக்கு ஏன் வேப்பம் இலை?

அமோனியா வடிவிலானதழைச்சத்தைநைட்ரேட் வடிவிற்கு மாற்றும் செயலைத் (நைட்ரிபிகேஷன்) தடுத்து மெதுவாக்கும் திறன் வேப்பம் இலைகளுக்கு உள்ளதா?இதனை ஆராயத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வேப்பம் பொருள்களான வேப்பம் பிண்ணாக்கு பச்சையான மற்றும் காய்ந்த வேப்பம் இலைகளை யூரியாவுடன் போட்டு உழுது பயிரிட்டதன் விளைவாக 50 நெல் ரகம் நல்ல தானிய விளைச்சலைக் கொடுத்துள்ளது. இந்த விளைச்சலானது வெறும் யூரியாவினால் வரும் விளைச்சலைக் காட்டிலும் அதிகமானது.

வேப்பம் பொருள்களிலும் வேப்பம் இலைகள் வேப்பம் பிண்ணாக்கை விடச் சிறந்த பலனைக் கொடுப்பவையாக உள்ளன. வேப்பம் இலைகளிலுள்ள மூலப் பொருள்களான அசாடிரக்டின், நிம்பின், மற்றும் நிம்பிடின் என்பவைகள் அமோனியா வடிவிலுள்ள தழைச்சத்தை நைட்ரேட் வடிவிற்கு மாற்றும் நுண்ணுயிர்களை அழித்து தழைச்சத்தை மெதுவாகவும், நீண்ட நாட்களுக்கும் பயிர்களுக்கு கிடைக்குமாறு செய்கின்றது. மேலும் வேப்ப இலைகளில் 2.45 சதவீதம் சத்து இருப்பதால் பயிருக்கு இடும் தழைச்சத்தின் அளவு அதிகமாகிறது.

வேப்பம்இலைகளை நைட்ரிபிகேஷனைத் தடுக்கும் பொருளாக உபயோகிப்பதால் பயிருக்கு இடும் தழைச்சத்தில் 50 சதம் சேமிக்க முடிகின்றது.

நன்றி: வளரும் வேளாண்மை

## கழிவு நீரில் - -

சமயலறையில் பாத்திரம் கழுவும் நீரும், குளியலறையில் இருந்து வெளியேறும்நீரும் இன்று ஊர்களில் சாக்கடையாகக் காட்சியளிக்கின்றது. புத்தியுள்ள குடும்பப் பெண்கள் இவற்றைச் செல்வமாக மாற்றி விடலாம் இவை பாயும் இடங்களில் காய்கறித் தோட்டம் போட்டால் வீட்டிற்கு வேண்டிய மரக்கறி வகைகளைப் பெற முடியுமல்லவா?

## இலக்கிய ....

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் கூட வர்ணிக்கத் தவறிவிட்டார். அன்றைய செல்வச் செழிப்புக்குக் காரணமான, தமிழ் பாரம்பரியத்தின் மேன்மைக்கு அத்திவாரமாக விளங்கிய அந்த ஏழை மக்களின் வாழ்க்கை கல்கியின் நாவலில் இடம் பெறுமல் போய்விட்டது. அவர்கள் வாழ்க்கையில் சுழன்றோடிய சுகதுக்கங்கள்வெளிக்கொணரப்படவில்லை. மேலும் நிலப்பிரபுத்துவத்தின் இழிவுச்சின்னங்களும் ஆங்காங்கே நாவலில் காணப்படுகின்றன.

எனினும் தமிழனுக்கென்றொரு சிறப்பான பாரம்பரியம் உண்டு என்பதை வெளிக்காட்டக்கூடிய வகையில் அமைந்த இந்நாவலில் திகழ்ந்த நிறைகளெல்லாம் மேற்படி சின்னஞ்சிறு குறைகளை மூடி மறைத்து விட்டன எனவே, பொது நோக்கில் 'பொன்னியின் செல்வன்' ஓர் உயர்ந்தகாவியம்: தமிழனது இதயம்;மேன்மையானகலைப்படைப்பு.ஒரே வசனத்தில் சொல்லப்போனால் அது இன்பமும் துன்பமும் பொருந்தி அமைந்த ஓர் இலக்கிய மாளிகை. இதுபோன்ற நாவல்கள் உதிக்க வேண்டும்; எம்மை உயர்த்த வேண்டும். கலைப்படைப்புக்கள் சுடர்விட்டுப்பிரகாசிக்கட்டும். எமது பாரம்பரியம் புத்துணர்வு பெற்று ஒளிரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செய்திக்கோவை

மார்ச் 21 - 28

வெள்ளி:

● குடாநாட்டில் 3 பகுதிகளில் ஷெல் தாக்குதல்: குழந்தை, மாணவி பலி.

● புதுக்குடியிருப்பில் 7 பேர் சுட்டுக்கொலை

● இனப்பிரச்சினையைப் புத்தர் வழியில் தீர்க்கவும்; இந்திய நிலை அமைச்சர் பேச்சு

சனி:

● தமிழ்ப் போராளிகளிடம் ஏவுகணைகள் — லண்டன் நிறுவனம் தகவல்.

● தாதிகள் சங்கத்துக்குத் தடை — அரசு அறிவிப்பு

ஞாயிறு:

● பண்டாரி வேண்டாம்; தமிழகம் சொல்கிறது

● இஸ்ரவேல் ஆலோசகர் பாகிஸ்தானுக்கு — இந்தியா கூற்று

● யாழ் ஏரியில் மீன் பிடிக்கச் சில நிபந்தனைகள்.

திங்கள்:

● டில்லியின் கூட்டணி நிரந்தரப்பிரதிநிதி

● தமிழரைக் கொல்வதை நிறுத்தி நேரடிப் பேச்சுக்கு வழிவகுக்க வேண்டும் — அமைச்சர் பகத் இலங்கைக்கு வேண்டுகோள்.

● நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு 15 லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க முடிவு.

செவ்வாய்:

● ஓமந்தை அருகே குண்டு வெடித்து யாழ் தேவி தீயில்.

● வவுனியாவில் பெண் உட்பட ஐவர் கொலை.

● திட்டவட்டமான யோசனை தந்தால் பண்டாரியை அனுப்புவேன் — ராஜீவ் அறிவிப்பு

புதன்:

● இலங்கையில் ஆயுதத் தொழிற்சாலை நிறுவ சீனு மறுப்பு

● தெல்லிப்பளையில் இரண்டரைமணி நேர ஹெலிக்கொப்டர் தாக்குதல் — ஒருவர் மரணம்.

வியாழன்:

● இந்திய அரசு முன் இரண்டு யோசனைகள்: ஆராய்ந்த பின்னரே அடுத்த நடவடிக்கை.

● யாழ் நகரில் திவட்டிப் போராட்டம்

## 2 பேருக்கு ஒரு வாக்குச்சாவடி

இந்தியாவில் லாடக் பகுதியில் தம்சக் என்ற கிராமம் மிகச்சிறியது

அந்தக் கிராமத்திற்கும் தேர்தலில் பங்கு உண்டு. வாக்குச்சாவடி உண்டு. வாக்காளர்கள் எத்தனை பேர் தெரியுமா? இரண்டே இரண்டு பேர் கணவன் மனைவிமட்டுமே.

இந்த இருவரும் அந்தக் கிராமத்து வாக்காளர்களாகச் சென்று நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள்.

— நீ. ரவிதாசன் —

### குத்தகைக்கு

சகல தளபாடங்களுடன் 176 ச.அ. பரப்புள்ள கடையொன்று யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் உடனடியாகக் குத்தகைக்குக் கொடுக்கப்படும். சனி, ஞாயிறு தினங்களில் தொடர்பு கொள்க பவானி பேணிச்சர் பலஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


யாழ். மாவட்ட சகல விடியோ கிளப் ஸ்தாபனங்களின்

**பொதுக்கூட்டம்**

இடம்: 'எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்' [3ஆம் மாடி]
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 30-3-86 (நாளை) ஞாயிறு.
நேரம்: பி.ப. 4-00 மணி (சரியான நேரத்துக்கு தொடங்கும்)

நாம் எதிர்நோக்கும் இன்றைய பிரச்சினைகளை ஆராய்வதற்காக அனைவரும் தவறுது கூட்டத்திற்குச் சமுகமளிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்,
விடியோ கிளப் ஸ்தாபகர்கள்.



# பாதுகாப்பு

"ஆறிலும் சாவு, நூறிலும் சாவு" (மரணம் எந்த வயதிலும் எப்பொழுதும் வரலாம்) என்பதறகாக நாமே மரணத்தை நோக்கிச் சென்று அவமாக எம்மை அழித்துக்கொள்ளக்கூடாது.

"அஞ்சுவது அஞ்சாமை பேதைமை" என்பது வள்ளுவப் பெருமான் வாக்கு. அஞ்சவேண்டியதைக் கண்டு அஞ்சி, ஒதுங்கி, தவிர்த்து நடத்தலே அறிவுள்ள செயலாகும்.

ஆகவேதான்

அஞ்சவேண்டிய கோட்டைக் குண்டடிக்கு அஞ்சியும், உள்நாட்டு வெளிநாட்டு ரெலிபோன் அழைப்புக்கள் பெறவரும் தமிழ்ப் பேசும் பெருமக்கள் இந்த அவலங்களில் சிக்கித்தவிக்கக் கூடாது என்பதற்காகவும் கோட்டைக் குண்டடிபாயும் தூரத்திற்கு அப்பால் உள்ள ஸ்ரான்லி வீதியில் 'ரெலிகுளோப்' சொற்பகாலத்திற்கு முன்னர் நிறுவப்பெற்றது.

தமிழ்ப்பேசும் பெருமக்களுக்கு பாதுகாப்பான சூழலில் வேண்டிய பொழுதெல்லாம் சேவை நல்க தினமும் இரவுபகல் 24 மணி நேரமும் கருமம் ஆற்றிக் கொண்டேயிருக்கிறது 'ரெலிகுளோப்'!

கோட்டைக் குண்டடி நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளைகளிலும் கதவடைக்கப்படாது சேவையில் ஈடுபட்டுக் கொண்டேயிருக்கிறது 'ரெலிகுளோப்'!

எந்நாளும் எந்நேரமும் அச்சம் எதுவுமின்றி ரெலிபோன் பேச வசதி செய்து தருகிறது 'ரெலிகுளோப்'!

பணிவும் பக்குவமும் மிக்க 'ரெலிகுளோப்' சேவையில் உங்கள் பாதுகாப்பும் இருக்கிறது.


# பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

## 458 பேருக்கு தண்டனை

### ஒரேயொரு கொலைக்காக

ஒரு கொலைக் குற்றத்திற்காக 458 பெண்கள் தண்டனை அனுபவித்தது பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

இப்படிச் சம்பவம் இருபதாம் நூற்றாண்டில் தான் நடைபெற்றிருக்கிறது

தென்னாபிரிக்காவின் இனன்டா என்ற இடத்தைச் சேர்ந்த நொடலொம்ப் நிகாவைன்டே என்ற வட்டிக்குப் பணம் கொடுக்கும் ஒருவர் தான் கொல்லப்பட்டவர்.

'இகுபக்மெனி' என்ற கிராமத்தில் தான் கொடுத்த கடனை அறவிட வந்தபோது அவர் கொல்லப்பட்டார். கிராம மக்கள் ஒன்றுகூடி கல்லெறிந்தும் தடியால் அடித்தும் அவரைக் கொலை செய்து விட்டார்கள்.

இந்தக் கொலைபற்றி விசாரணைக்கு உத்தர விடப்பட்டது

கிராமத்தில் ஐநூறு பெண்களும் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனையை ஏற்க முன்வந்தார்கள்.

1939 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உள்ளூர் மாவட்ட நீதிவானின் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு வந்தது. பெரிய மைதானம் ஒன்றில் விசாரணை நடைபெற்றது.

விசாரணை முடிவில் மரணம் விளைவித்த குற்றத்திற்காக 458 பெண்களுக்கு 3 தொடக்கம் 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

மொத்தமாக எல்லோருக்கும் வழங்கப்பட்ட தண்டனை 120 வருடங்களுக்கு அதிகம்.

வன்செயலில் ஈடுபட்ட கொலைஞர் கூட்டத்தில் இருந்தார்கள் என்பதை நிருபிக்கப்படாததால் 42 பேர் விடுவிக்கப்பட்டனர்.

நீதியின் சரித்திரத்தில் ஒரு கொலைச் சம்பவத்திற்கு இத்தனை பேர்குற்றவாளியாகக் காணப்பட்டது இதுதான் ஒரே தடவையாகும்.

## ரஷ்யாவில்தான் வாசகர்கள் அதிகம்

ரஷ்யாவில் ஒருவருடத்தில் நாள் இதழ்களும், சஞ்சிகைகளுமாக மொத்தம் 3,500 கோடி பிரதிகள் வெளியாகின்றன

ஒவ்வொருரஷ்யக்குடும்பத்தினரும் 5 செய்திப் பத்திரிகைகளும் வார—மாத இதழ்களும் வாங்கிப் படிக்கிறார்கள்.

ரஷ்யாவில் 7,500 நாள் இதழ்கள் வெளிவருகின்றன. அவை நாள்தோறும் 57 மொழிகளில் மொத்தம் 13 கோடியே 40 இலட்சம் பிரதிகள் வெளியாகின்றன.

ரஷ்ய பத்திரிகையாளர் சங்கமொன்றிருக்கிறது. இச்சங்கத்தில் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

இருபத்திரண்டு பல்கலைக் கழகங்களில் பத்திரிகைத் தொழில் பயிற்றுவிக்கப்படுகின்றது பன்னிரண்டாயிரம் மாணவர் இதனைக் கற்று வருகின்றார்கள்.

ரஷ்யாவிலுள்ள எழுத்தாளர் சங்கம் பத்திரிகையொன்றையும் வெளியிடுகின்றது. இப்பத்திரிகையின் பெயர் "கெசத்தா" இப் பத்திரிகை மிகவும் பிரசித்தமானது. தினமும் பத்து லட்சம் விற்பனையாகின்றது

—புத்தொளி—

## அன்னாசியிலும் சாதனை

1984 நவம்பரில் 17 றாத்தல் 8 அவுன்ஸ் நிறையுள்ள அன்னாசிப் பழம் பிலிப்பீன்ஸில் உற்பத்தி செய்யப்பட்டது.

1978 இல் பிரேஸில் நாட்டில் 28 றாத்தல் நிறையான அன்னாசிப் பழம் ஒன்று உற்பத்தியானது.

## நங்கையர் அணியும்

### ஆடைகளுக்கு நல்ல பெயர்கள்

நங்கையரின் நவீன ஆடைகளுக்குப் பலவிதமான பெயர்கள்.

'மினி', 'மக்ஸி' 'மிடி' என்பவை அவற்றில் சில இந்தப் பெயர்கள் ஒவ்வொன்றும் அந்தந்த ஆடைகளின் தன்மைக்கு ஏற்ப சூட்டப்பட்டவையாகும்.

ஆகக்குறைந்தது-இதற்கு மேல் குறைக்க முடியாது—என்ற அளவுக்கு கட்டையாக Minimum (மினிமம்) அளவுக்கு அணியும் ஆடை 'மினி'. 'மினிஸ்கேட்' என்ற சொல்லும் இதிலிருந்துதான் வந்தது

ஆகக் கூடிய நீளத்திற்கு—இதற்கு மேல் கூட முடியாது — என்ற Maximum (மக்ஸிமம்) அளவுக்கு அணியும் ஆடை 'மக்ஸி'.

இந்த மினிக்கும், மக்ஸிக்கும் இடைநடுவில் Medium (மீடியம்) அளவுக்கு அணிவது 'மிடி' என்று அழைக்கப்படுகிறது.

## சுவையான தகவல்கள்

அதிகமான ஆயுதப் படை வீரர்களைக் கொண்ட நாடு எது தெரியுமா?

1984 ஆம் ஆண்டு கணக்கின்படி ரஷ்யாவிடம் உள்ள துருப்புகள் 51 லட்சத்து 15 ஆயிரம் அமெரிக்காவிடம் 21 லட்சத்து 35 ஆயிரத்து 900 துருப்புகளும், பிரிட்டனிடம் 3 லட்சத்து 26 ஆயிரத்து 849 வீரர்களும் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தில் 40 லட்சம் வீரர்களும் இருக்கிறார்கள்.

அமெரிக்காவில்மட்டும் ஒரு லட்சத்து 45 ஆயிரம் பதிவு செய்யப்பட்ட பல் வைத்தியர்கள் தொழில் செய்கிறார்கள்.

★ ★ ★

## கரடிச் சின்னம் ஆணா? பெண்ணா?

### இதற்குக் கூடச் சண்டை

சுவிஸ் நாட்டின் இரண்டு மாநிலங்கள் கரடியையே தேசிய சின்னமாகக் கொண்டிருந்தன.

சென் கோல் மாநிலம் தனது கலண்டரில் தனது சின்னமான கரடி ஆண் என்றும் அப்பென்ஸால் மாநிலத்தின் சின்னமான கரடி பெண் என்றும் அறிவித்தது.

இது அப்பென்ஸால் மாநிலத்துக்கு ஆத்திரத்தைக் கொடுத்தது. எமது சின்னமாகவும் ஆண்கரடி தான் உள்ளது என்று அப்பென்ஸால் மாநிலம் பிரகடனஞ் செய்தது.

இறுதியில் இரண்டு மாநிலங்களும் சண்டையில் இறங்கின.

இரண்டு ஆண்டுகள் சண்டை நடந்தன. ஆயிரக்கணக்கானோர் இறந்தனர்.

கடைசியில் அப்பென்ஸால் மாநில சின்னமான கரடி ஆண் என்று சென். கோல் மாநிலம் அறிவித்தது.

## காலில்லா மனிதரின் அற்புத சாதனை

ஜொனி எக் பிறந்த போது ஒரு சில மணித்தியாலயங்களுக்குக் கூடுதலாக அவர் வாழ்வாரா என்று பலர் சந்தேகங் கொண்டார்கள்.

அவருடைய மெலிந்த உடல் ஒரு குழந்தையின் மூன்றில் ஒரு பங்காகும். உடலில் இடுப்புக்குக் கீழ் எந்த அவயவமும் அவருக்கு இருக்கவில்லை.

ஆனால் அவர் சிறந்த தட்டச்சாளராக சாகஸக்காரராக, மந்திரவாதியாக ஏன், நல்ல நடன வீரராக மலர்ந்தார். கைகள் காலாக அவர் நடந்து செல்வார். நல்ல பேஸ்பந்து வீரராக, நீச்சல் வீரராக புகழடைந்தார்.

முழுமையான உடம்பு இல்லாத குறை அவரது உடல் நலத்தை எவ்வாறும் பாதிக்கவில்லை. அவர் ஒரு நாளும் சுகவீனம் என்று ஒய்ந்ததில்லை,

ஆனால் அவருடைய இரட்டைச் சகோதரர் சாதாரணமான சராசரி மனிதராக வாழ்கிறார். இருவரும் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி பிறந்தனர்.

## பத்திரிகை சாதனை

உலகில் அதிக விற்பனையுள்ள செய்தித்தாள் எது தெரியுமா?

ஜப்பானிலிருந்து வெளியாகும் 'ஜோமியூரி ஷிம்புன்' என்ற பத்திரிகை 1985 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி ஒரு கோடி 39 லட்சத்து 68 ஆயிரத்து 82 பிரதிகள் விற்பனையாகியது.

## புற்றுநோய்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்: சுரங்கம், தயாரிப்பு, நோய் எழும் அங்கம்: நுரையீரல்.

காரணி: மரத்தூசி ஐசோபுரோபிலீன் நிக்க உலோகத்தாது. தொழில்: மரவேலை, தோல் பதனிடுதல், சுரங்கம், நோய் எழும் அங்கம்: நாசிக்குடா.

காரணி: பொலிவீனல் குளோரைட், தொழில்: தயாரித்தல், நோய் எழும் அங்கம்: ஈரல்.

காரணி: இருமி நாசினிகள், தொழில்: துணி தயாரித்தல், கமம் தயாரித்தல், நோய் எழும் அங்கம்: சிறுநீர்ப்பை, நாசிக்குடா நுரையீரல்.

பூஞ்சணத்தில் உள்ள அட(f)ளா ரொக்சின் உணவு வகைகளில் (பனம்மா, பனம்கிழங்கு, நிலக்கடலை) சேர்ந்து ஈரலில் நோய் ஏற்படுத்தலாம்.

இக்காரணிகள் யாவரையும் பாதிப்பதில்லை நோய் ஏற்படுவது, குறிப்பிட்ட காரணியின் பாதிப்புத்தன்மை, காரணியின் விசை அல்லது அளவு. உடலைத் தாக்கிய காலத்தின் அளவு பாதிக்கப் டுபவரின் உடல் நிலை முதலியற்றில் தங்கியுள்ளது. (தொடரும்)

## ஈழத்--

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நோக்கில், இன வேறுபாடு பற்றிய வரைவிலக்கணங்கள் புதிய விளக்கங்களை இன்றியமையாது வேண்டிநிற்கின்றன.

யாழ்ப்பாணத்தில் முதற் குடியேற்றம். பெருங்கற் பண்பாடு (கி மு 500 — 100)

யாழ்ப்பாணத்தில் முதற்குடியேறிய மக்கள் பெருங்கற் பண்பாட்டுக்கு உரியவர்களெனத் தொல்பொருளியற் சான்றுகள் நிறுவுகின்றன. பெருங்கற் பண்பாடு இரும்புக்காலத்தில் தென்னிந்தியாவில் நிகழ்ந்த தோற்றப்பாடு ஆகும். கி. மு. 500 அளவில் குடிபுகுந்த முன்னோடிகள் முதிரா நிலையிலமைந்த வேளாண்மை, கடலேரேரி வளங்களைப் பயன் கொள்ளுதல், மந்தை வளர்ப்பு முதலிய பல்வேறு வகைப்பட்ட வாழ்க்கைத் தொழில்களை மேற்கொண்டனர். அவர்கள் முதல்நிலைத் திராவிட மொழியைப் பேசினர். அவர்கள் பௌத்தரல்லர். சங்கத் தமிழகத்தில் நிலவிய இயற்கை நெறிக்காலச் சமயத்தை ஒத்த சமயத்தை அவர்கள் தழுவி நின்றனர். அவர்கள் முழுமையாகவரலாற்றுமுதற் காலத் தென்னிந்திய மக்களோடு ஒத்த குழுவினராகவே விளங்கினர். கிறித்தவ ஊழியின் தொடக்க நூற்றாண்டுகளில் எழுந்த தமிழ் நூல்களும் பாளி ஏடுகளும் அவர்களை நாகர் என்றும் அவர்களது நாட்டை நாகநாடு அல்லது நாகதீவு என்றும் வழங்கின.

(வளரும்)

## ராஜீவுக்கு--

[3 ம் பக்கத் தொடர்ச்சி]

அரசு இன்னும் தனது பதிலை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

கூட்டணியின் மாற்று யோசனைகளை ஏற்கக் கூடிய நிலையில் ஐ.தே.க அரசாங்கம் இல்லை என்பது கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகை விமர்சனங்கள் மூலம் தெரிகின்றது.

இலங்கை ஒரு நாடாக இருக்கவேண்டும் என்றால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகளை ஏற்பதுதான் இப்போது உள்ள ஒரே ஒரு வழி.

இந்த யோசனைகளை திரு. ஜெயவர்த்தனா வைக் கொண்டு ஏற்க வைப்பதுதான் பிரதமர் ராஜீவ் காந்தியின் ராஜதந்திரத்துக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும்.

இது சரிவராமற் போனால் இருக்கும் ஒரே ஒரு மாற்று வழி எது என்று சொல்லத்தேவையில்லை.

[illegible] தெரிவு செய்யும் [illegible] ஜெயவர்த்தனாவில் தான் தங்கியுள்ளது.

## சம்பளம்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

திப்பது பொருத்தம்

நாட்டில் வரட்சி, வன்செயல்கள், பஞ்சம் மலிவதற்கு காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்கள், நவீன அறிவு இல்லாமை, ஒழுக்கவியலை அனைவரும் பேணுமை போன்ற பல காரணங்கள் உண்டு. இவற்றை அமுல் செய்ய வேண்டிய அரசில் அதிகாரிகளாக இருக்கும் ஆண்களே இதற்குப் பொறுப்பு. கற்பு நிலை தவறிய பெண்களால் இந்த நிலை உருவாகுவதில்லை.

மஞ்சள், குங்குமம் அணிவதும் தம்மையும் வீட்டையும் அலங்கரிப்பதும் விரதம் இருப்பதும் தான் பெண்கள் பங்கு என்ற குறுகிய வட்டத்துள் பெண்மையைப் பார்க்கின்றன தமிழகத்துச் சஞ்சிகைகள்.

கற்பழிக்கப்பட்ட பெண்கள் இறப்பதும், தீக்குளிப்பதும், யானையால் மிதிக்கப்படுவதும், என்பன போன்ற செய்திகளைத்தான் பெரும்பாலான தமிழகத்து நாவல்களில் காணமுடிகிறது. இறந்து போகும் செய்திகளை செத்த மொழியில் சொல்லும் இத்தகைய நாவல்களில் பிணவாடை வீசுகிறது

உள்நாட்டு யுத்தம் காரணமாக இளம் பெண்கள் விதவைகள் ஆகின்றனர். இத்தகைய சூழ்நிலை இங்கும் நிலவுகிறது. இவர்களுக்கு முற்போக்கு ரீதியான நிரந்தர புனர்வாழ்வுத் திட்டம் தேவை.


பெண்ணிலைவாதச் சிந்தனையை எடுத்துக் கொண்டால், யாழ்ப்பாணத்துச் சமூகம் இருபது ஆண்டுகள் பின்தங்கி உள்ளது.

நாங்கள் இப்போது வேலிதான் கட்டுகிறோம். 'We are only mending the fence' உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை. நவயுகம் காண நங்கையரே வாரீர்'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 9



அனுப்புபவர் பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

கையெழுத்து:- ..............................

**இடமிருந்து வலம்:**

1. வன்செயல்களினால் நாட்டில் மலிந்துபோனவர்கள்.
5. சபை.
7. சுக்கு, திப்பிலி, மிளகு
8. வயது.
9. ஜக்குத்திர்துறையில் ஒரு கிராமம்.
11. துப்பாக்கியிலிருந்து பாய்வது.
12. விபீடத் தலைவர்.
13. விலை உயர்ந்த உலோகம்.
14. வடக்கு, கிழக்கில் கேட்பாரின்றி நடப்பது.
15. வீரம்.
16. பெரியது. காய்க்கும். பழம் சுவையானது.
18. இணைப்பு.
20. நாளில் அரைப் பகுதி.
22. இந்தியத் தலைநகரம்.

**மேலிருந்து கீழ்:**

1. ஜனாதிபதி கையில் குவிக்கப்பட்டிருப்பது.
2. யானை.
3. தினமும் மாறுவது.
4. காதணி.
5. கூட்டு
6. நங்கையர்
8. பெண் தெய்வம்
10. ஆண் ஆடு
13. இந்த உணர்ச்சி இல்லாததால் தான் இலங்கை இப்படி இருக்கிறது
15. மீட்டப்படுவது
17. அரையில் அரை
18. வேறுபடுத்து.
19. நவீன.
20. இது நன்றாக இருந்தால் சிரிப்பு அழகாக இருக்கும்.
21. ஒருவகை வெண்பா.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல 9, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. த ஷப்ரு-உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பிரின்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது

* சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரிலிருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 7

வெற்றி பெற்றவர்கள் விவரம்:-

1 ஆம் பரிசு:- சோல் ரவி மரியநாயகம் 7ஆம் ஆண்டு,புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

2 ஆம் பரிசு:- செல்வி மு. வாசுகி 120, முதலாம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.

3ஆம் பரிசு:- திருமதி வி. பாலசுப்பிரமணியம், இல. 50, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் இல. 7 விடைகள்

**இடமிருந்து வலம்:**

1. சிதம்பரம், 6 வகு 7. ரக, 8 வீடு, 9 ராதிகா 11. சிகரம், 13 யமன், 14. திரிசியம், 16. காதல், 18. சிரங்கு, 20 பலம், 21. கைராசி.

**மேலிருந்து கீழ்:**

1 சிவராத்திரி, 2. தகுதி, 3 பர' 4. ரகசியம், 5. கடும், 8 வீரன், 10 காஞ்சிபுரம், 12. கமம், 15 வால். 17. தரிசி, 18. சில, 19 குகை

A/L 86
நுண்கணிதம்
(பிரயோகம் மட்டும்)
புதன், வெள்ளி நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 2—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)

சஞ்சீவி

29.03.1986 சனிக்கிழமை

A/L 86
காவிகள்
செவ்வாய், வியாழன் நாட்களில்
2-30இல் இருந்து 4-30 வரை
ஆரம்பம்: 3—4—86
ஆசிரியர்: ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)

# என்றுதான் தீரும் இந்த பண்டாரி மோகம்—இலங்கைக்கு?

'பந்து' வந்து விழுந்து நூறு தினங்களுக்கு மேலாகி விட்டன.

சரியான பதில் கிடைக்கவில்லை என்று திரு. பண்டாரி கொழும்பு வரவில்லை.

பந்து விளையாட இந்தியாவும் கொழும்பு வரவில்லை.

எப்படியாவது உருப்படியான பதிலைப்பெற இந்தியா பகீரதப் பிரயத்தனம் எடுக்கிறது

மாலைதீவில் வைத்து ராஜீவ் கர்ஜித்தார். காதில் போட்டுக்கொள்ளவில்லை.

பகர் ஒரு முறைக்கு இரு முறை முழக்கமிட்டார். பலிக்கவில்லை.

ஜெனீவாவில் குற்றஞ் சுமத்தப்பட்டது. போதாக்குறைக்கு நாராயணனும் பேசிவிட்டார்.

எல்லாவற்றிற்கும் ஒரே பதில் பண்டாரியை அனுப்புங்கள் என்பது தான். கடைசியாக இலங்கைத் தூதர் பெர்னட் திலகரத்ன பிரதமர் காந்தியை டில்லியில் சந்தித்தார்.

15 நிமிடங்கள் நீடித்த இச்சந்திப்பில் பிரதமர், இலங்கைத் தூதர் சொல்வதைக் கேட்டுக்கொண்டு இருந்தாரே ஒழிய விளக்கம் எதையும் இலங்கைத் தூதரிடம் கேட்கவில்லை.

இலங்கைத் தூதர் உருப்படியாக பிரதமரிடம் கூறியது ஒன்றே ஒன்று தான்

பண்டாரியை ஒரு முறை இலங்கைக்கு அனுப்புங்கள்-என்பதுதான்

பண்டாரி, பண்டாரி என்று இலங்கை அடிக்கடி உச்சாடனம் செய்வது பலருக்குப் பிடிக்கவில்லை. நம்மவரில் பலர் கூட பண்டாரியின் செயல்களை சந்தேகக்கண் கொண்டு தான் பார்த்து வந்தனர்.

இப்போது அச்சந்தேகம் தமிழக அரசுக்கும் "மணத்து" விட்டது போல் தெரிகிறது

பண்டாரியை அனுப்பாதீர்கள்; பகதீதை கொழும்புக்கு அனுப்புங்கள் இப்படி அ.தி.மு.க. நாடாளுமன்றக்குழுத் தலைவர் திரு. கே. குழந்தைவேலு நாடாளுமன்றத்தில் கேட்டுவிட்டார்.

பண்டாரி தான் இந்தியா இப்படி இலங்கைக்கு ஒரு எண்ணம்.

இந்த எண்ணத்தைப் போக்கடிக்கும் வகையில் இந்தியா செயற்படத் தொடங்கி விட்டது.

வழவழா பேச்சு வேண்டாம்; திட்டவட்டமான யோசனைகள் தான் வேண்டும் — என்று அறிவித்த பின்னர் கூட பண்டாரி தான் வேண்டும் என்று இலங்கை அடம்பிடித்தது.

கடைசியாகப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைக்கு வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறிவிட்டார்

"பண்டாரியை அனுப்பத்தயார்: முதலில் இறுதிப் பேச்சுக்குத் தயாராக திட்டவட்டமான எழுத்து மூலமான யோசனைகளை" அனுப்புங்கள் இப்படி அறிவிக்கப்பட்டுவிட்டது.

அதுவும் சில தினங்களுக்கு இடையில் திட்டவட்டமான யோசனைகள் வரவேண்டும்; இல்லாவிடில் இந்திய மத்தியஸ்த முயற்சியில் முறிவு ஏற்பட்டுவிடும் — இப்படியும் இந்தியா கூறிவிட்டது

இனியாவது இலங்கையைப் பிடித்துள்ள பண்டாரி மோகம் தீருமா?

அல்லது இறுதிப் பேச்சுக்களுக்குப் பதில் இறுதித் தீர்வு காணத்தான் இலங்கை தயாராகுமா?

இப்படி அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகின்றது

## கவலை இல்லாத மனிதர்

இப்போது பல விஷயங்களைகளில் அடிக்கடி கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில் முதலில் கவலை தெரிவித்தவர் அன்னை இந்திரா.

மரணவிசாரணை இன்றி சடலங்களை புதைக்கலாம் என்று கொண்டு வரப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள் குறித்து 1983 ஜூனில் அன்னை இந்திரா கவலை தெரிவித்தார்.

உள்ளம் பறமும் — குறுமுனி

அன்று தொடக்கம் 31 மாதங்களாக இலங்கைத் தமிழரின் அவலநிலை குறித்துக் கவலை தெரிவிக்கும் படலம் தான் நடந்து கொண்டிருக்கிறது.

இதனிடையில் யார், யாருக்குக் கவலை தெரிவிப்பது என்பதில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் போட்டி.

'இந்து'வும் 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஸும் கருத்துத் தெரிவிக்கும் அளவுக்கு "கவலை தெரிவிக்கும் கதை" வளர்ந்து விட்டது.

பத்துத் தமிழர் இறந்ததற்கு இந்தியா கவலை தெரிவித்தால் அது மறுநாள் 20 தமிழர் கொல்லப்படுவதற்கு வழிவகுக்கின்றது. இப்படி அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்.

'இந்த நிலையில் கவலை தெரிவிப்பதால் என்ன பயன்?' —இப்படி 'இந்து' ஆசிரியர் தலையங்கத்தில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது

கவலைக்கிடமான நிலையில் இருக்கும் தமிழினத்துக்கு இதுவும் ஒரு கவலை தரும் செய்தி.

உடும்பன்குளம் கொலைகள் உலகைக் கலக்கிவிட்டன. லண்டன் பத்திரிகைகளில் எல்லாம் முன்பக்கத் தலைப்புச் செய்தி.

வழமைபோல் இந்தியாவும் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்தது

இம்முறை ஒரு படி மேலே போய், இனப்படுகொலையின் சாயல் இலங்கை அரச படையினரின் நடவடிக்கைகளில் தெரிவித்ததாகச் சொல்லிவிட்டது.

கவலையே இல்லாது இருந்த இலங்கைக்கு அந்தக் கூற்று பெருங்கவலையைக் கொடுத்துவிட்டது

சிங்களப் பொதுமக்கள் கொல்லப் பட்டார்களே அது பற்றி எல்லாம் என் இந்தியா கவலை தெரிவிக்கவில்லை என்று இலங்கை அரசு, இந்தியாவை காரசாரமாகக் கேட்டுவிட்டது.

'உடும்பன்குளம் படுகொலைகள்' குறித்து இலங்கை அரசைக் கண்டித்து இந்துஸ்தான் டைம்ஸ் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருந்தது.

விமானத் தாக்குதல்களில் குழந்தைகள் பெண்கள் கொல்லப்படுவது குறித்துக் கூட இலங்கை அரசு கவலை தெரிவிக்கவில்லையே என்று அந்த ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டிருந்தது.

இலங்கை அரசு தமிழ் மக்கள் பற்றிய கவலையே இல்லாத அரசு என்று 'இந்துஸ்தான் டைம்ஸ்'க்கு தெரியாது போலும்.

1983 ஜூலை கலவரத்தில் கொழும்பில் தமிழர்



உயிரோடு எரிக்கப்பட்டனர் கொழும்பு அகதிகள் முகாம்களிலே பல்லாயிரக் கணக்கான தமிழ் அகதிகள்.

உலகமே தமிழனுக்கு அனுதாபம் தெரிவித்தது. கலவரத்தின் பின்னர் முதன் முதலாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா 'ரூபவாஹினி'யிலே தோன்றினார்.

சிங்கள மக்களின் அபிலாஷைகளை இது வரை நான் கவனிக்கத் தவறிவிட்டேன். இனி மேல் சிங்கள மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றப் போகிறேன்.

இந்தச் சாரப்பட ஜனாதிபதி சொன்னாரே ஒழிய, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அனுதாபமே தெரிவிக்கவில்லை.

அப்படிப்பட்ட திரு. ஜெயவர்த்தனாவை', தமிழன் பற்றிய 'கவலையே இல்லாத மனிதர்' என்று அழைக்கலாம் அல்லவா!

## வீர வணக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

பரந்தனில் கடந்த வியாழன் ஆயுதப் படையினரின் தாக்குதலில் மரணமான போராளி கார்த்திக் (கந்தையா ஜெகநாதன் – முல்லைத்தீவு) என்பவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

## 'புதுசு' ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 29

'புதுசு' 10 இதழ்களுக்கான ஆய்வரங்கு யாழ் பல்கலைக்கழக மாணவர் பொது அறையில் மார்ச் 31 திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, திரு சு. வில்வரத்தினம், குப்பிழான் ஐ. சண்முகன், திரு கே. சண்முகலிங்கம், திரு உ. சேரன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

## குடும்ப முதலுதவி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மார்ச் 29

"குடும்ப முதலுதவி" நூல் வெளியீட்டு நிகழ்ச்சி தெல்லியடிபத்திய மகா வித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இந்த நூலை எழுதியவர் வைத்திய கலாநிதி க. சுகுமார் ஆவார்.

கட்டைவேலி, நெல்லியடி ப. நோ. கூ. சங்க ஆதரவில் வெளியீட்டு விழா நடைபெறுகிறது.

## வாவியில் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் விவரங்கள் வருமாறு:

தாய் த. பூரணம்மா (வயது 50), மகள் தெய்வானை (வயது 13), மருமகன்மார் மனோன்மணி (வயது 23), தோழமலர் (வயது 21), பேரன்கள் மணிவாணன் (வயது13), நிர்மலன் (வயது 4), பேத்திகள் சித்தராஞ்சனி (வயது 5), சுகந்தினி (வயது 2).

நிர்மலனின் சடலம் மட்டும் இன்னும் அகப்படவில்லை.

மீட்கப்பட்ட சடலங்கள் தொடர்பான மரண விசாரணையை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் நடத்தினார்.

உயிர்தப்பிய நால்வரில் ஒருவரான சித்திரவேலு சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:

இறந்த மனோன்மணி எனது மனைவி. உறவினர் ஒருவரை அதிரடிப் பொலீஸ்படை பிடித்து விட்டது என்ற செய்தி கேட்டு பதற்றத்தில் உறவினர்களுடன் தோணியில் நரிபுல் தோட்டத்துக்குச் சென்றுகொண்டிருந்தோம் அச்சமயம் தோணியின் குல்லா கவிழ்ந்து விழுந்தது. அதைத்தொடர்ந்து தோணியும் வாவியில் மூழ்கியது. இப்படி அவர் சொன்னார்.

## கருத்துக்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எமது கலாசாரத்துக்கு ஒவ்வாத "ஊத்தை"களை அக்குவதாக அறிகிறோம். அதனைக் கண்டிக்கிறோம். 'மினி'க்கள் தாமாகவே திருந்த வேண்டும்.

## புலிகள் . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

னுவ முகாமில் இருந்து திருகோணமலைக்குப் பொருள்கள் வாங்குவதற்காக நடந்தும் கவச வாகனத்திலும் 25 சிப்பாய்கள் வந்தனர்.

கன்னியா நீரூற்றுக்கு அண்மையில் வைத்து எமது போராளிகள் பலத்த தாக்குதலை மேற்கொண்டனர் கவச வாகனம் கண்ணி வெடியில் சிதறியது.

எமது தரப்பில் எதுவித சேதமும் இல்லை.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் [illegible] தெரிவித்துள்ளனர்.

# உலக உலா — என்.பி.சீலன்

## மத்திய தரைக் கடலில் நடந்த குட்டி யுத்தம்

1956 ஆம் ஆண்டு சூயஸ்கால்வாயை அப்போதைய எகிப்திய ஜனாதிபதி காமல் அப்துல் நாஸர் தேசியமயமாக்கினார்.

சூயஸ்கால்வாய் சர்வதேச கடற் பிராந்தியம் என்று கூறி பிரிட்டனும், பிரான்ஸும் சூயஸ் பகுதியில் அப்போது குண்டு மாரி பொழிந்தன.

சோவியத் யூனியன் 24 மணி நேர காலக்கெடு விதித்து எச்சரிக்கை விடுத்ததை அடுத்து பிரிட்டனும் பிரான்ஸும் பின்வாங்கின.

இந்தச் சம்பவம் நடந்து சுமார் 10 வருடங்களின் பின்னர் அதாவது 1967 ஆம் ஆண்டு பிரச்சினைக்குரிய அஹ்பா குடாவில் இஸ்ரவேல் கப்பல்களின் போக்குவரத்தை நிறுத்துவதற்காக அதனை மூடினார் அப்துல் நாஸர்.

இதனால் ஏற்பட்ட யுத்தம் 6 நாளில் முடிவடைந்தது.

இஸ்ரவேல் அரபு நாடுகளின் பெரும் பகுதியை விழுங்கி ஏப்பமிட்டது.

தற்போது மீண்டும் ஒரு கடல் பிராந்தியம் தொடர்பாக மோதல் ஏற்பட்டிருக்கிறது.

அதுதான் ஷித்தே வளைகுடா ஆகும்.

இவ்வாரம் ஷித்தே வளைகுடாவில் அமெரிக்காவும் லிபியாவும் மோதிக் கொண்டுள்ளன.

1981 ஆம் ஆண்டு இரு லிபிய ஜெட் விமானங்களை இந்த வளைகுடாப் பிராந்தியத்தில் அமெரிக்கா சுட்டு வீழ்த்தி இருந்தது.

அதன் பின்னர் இடம்பெற்ற ஆக மோசமான சம்பவமாக இந்த வார மோதல் கருதப்படுகிறது.

ஷித்தே வளைகுடா லிபியாவுக்கே சொந்தம் என்கிறார் லிபியத் தலைவர் கேணல் முவாம்மர் கடாபி.

இதனை அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஷித்தே வளைகுடா சர்வதேச கடல் பிராந்தியத்தில் இருக்கிறது என்கிறார் அவர்.

1979 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட கடல் எல்லைகளை ரஷ்யா உட்பட 35 நாடுகள் ஏற்றுக்கொண்டன என்றும் அதன் பிரகாரம் ஷித்தே வளைகுடாவும் சர்வதேச கடல் எல்லைக்குள் வருகிறது என்றும் அமெரிக்கா தெரிவித்திருந்தது

மத்தியதரைக் கடல் பிராந்தியத்தில் ஏற்கனவே அமெரிக்காவினதும் இஸ்ரவேலினதும் நலவுரிமைகளுக்கு சவால் விட்டுவந்த கேணல் கடாபி ஷித்தே வளைகுடாவில் மரணக்கோடு "Line of death" ஒன்றை ஏற்படுத்தினார்.

மரணக் கோட்டைக் கடக்கும் எந்த ஒரு கப்பலோ அல்லது விமானமோ லிபியாவின் தாக்குதலுக்கு உள்ளாகும் என்று எச்சரித்தார்.

ஏற்கனவே திட்டமிட்டவாறு அமெரிக்கா இப்பிராந்தியத்தில் இந்த வாரம் முற்பகுதியில் தனது 10 நாள் கடற்படை ஒத்திகையை ஆரம்பித்தது

கடற்படை ஒத்திகையின் போது கடாபியின் மரணக்கோட்டை அமெரிக்க விமானங்கள் தாண்டின அதுவே மோதலுக்கு வழி கோலியது.

லிபியாவின் சோவியத் தயாரிப்பு ஏவுகணைகளான 'சாம்-5' ஏவுகணைகள் அமெரிக்க விமானங்கள் மீது தாக்குதலை மேற்கொண்டன.

இதனை அடுத்து லிபியாவின் ஏவுகணை நிலையங்கள் மீதும் பீரங்கிப் படகுகள் மீதும் அமெரிக்கா பதில் தாக்குதலை நடத்தி பெரும் சேதங்களை விளைவித்தது.

அமெரிக்கா தனது 10 நாள் கடற்படை ஒத்திகையை அது முடிவடைய நான்கு நாட்கள் இருக்கும்போதே நிறுத்திக்கொண்ட போதிலும் இப்பிரச்சினை சர்வதேச அமைதிக்கு தொடர்ந்து அச்சுறுத்தலாகவே இருந்து வருகிறது

## படுகொலையிலிருந்து தமிழரைக் காப்பாற்றுங்கள்

### உலகநாடுகளிடம் கூட்டணி கோரிக்கை

சென்னை, மார்ச் 28

இலங்கைத் தமிழரை இனப்படுகொலையில் இருந்து காப்பாற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி உலக நாடுகளையும் குறிப்பாக இந்தியாவையும் கோருவது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற் குழு தீர்மானித்தது.

இலங்கைத் தமிழருக்கு இழைக்கப்படும் இன்னல்களைக் கண்டித்து இந்திய நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளிலும் குரலெழுப்பிய வெளியுறவு அமைச்சர் திரு பலிராம் பகத் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானமும் அரசியல் குழுவில் நிறைவேற்றப்பட்டது.

## மாத்தளையில் தமிழ் இளைஞர் கைது

கொழும்பு, மார்ச் 29

மாத்தளை பஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து இரண்டு தமிழ் இளைஞர்கள் சப்மெஷின் துப்பாக்கிகளுடன் கடந்த புதன் கிழமை பிடிபட்டனர்

கடத்தப்பட்டதாகக் கூறப்படும் வான் ஒன்றில் இவர்கள் வந்ததாகவும் வானின் சாரதி கொடுத்த தகவலைத் தொடர்ந்தே இவர்கள் கைதானதாகவும் கூறப்படுகிறது.

## மானிப்பாயில் இரு வீடுகளில் கொள்ளை

நல்லூர், மார்ச் 29

மானிப்பாயில் இரண்டு வீடுகளில் பல லட்சரூபா பெறுமதியான தங்கநகைகள், மின்சார உபகரணங்கள் ஆகியன இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளன

## சடலம் கடத்தப்பட்டது

பருத்தித்துறை, மார்ச் 29

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த ஒருவரின் சடலம் இனந்தெரியாத கோஷ்டியினரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை நின்றபோது இராணுவ முகாமிலிருந்து நடத்திய ஷெல் தாக்குதலினால் மரணமடைந்தார்.

இவரின் சடலத்தை அங்கிருந்து அப்புறப்படுத்திய பொதுமக்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் அடையாளம் காண்பதற்காகச் சேர்த்தார்கள்.

இதேவேளை செல்வச் சந்நிதி ஆலய வளவினுள் இருந்த தெல்லிப்பழை கொல்லன்கலட்டியைச் சேர்ந்த திரு. சோ. சுப்பிரமணியம் (வயது 50) என்பவரின் சடலம் மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## யாழ் ஆஸ்பத் . .

பிரிவுகள் நேற்று ஸ்தம்பிதநிலையை அடைந்தன.

கடத்திச்செல்லப்பட்டவர் வைத்திய நிபுணரிடம் மீள ஒப்படைக்கப்படும்வரை தொடர்ந்தும் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக டாக்டர்கள் தீர்மானித்துள்ளனர்.

காலையிலிருந்தே வெளிநோயாளர் பகுதிக்கு வந்த ஏராளமான நோயாளர்கள் நேற்று சிகிச்சை பெறாமலே வீடுதிரும்பினர்.

தாம் வேலைநிறுத்தம் செய்வதற்கான காரணங்களை விளக்கி அரச வைத்திய அதிகாரிகள் சங்க யாழ் கிளை அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது

## காரைதீவை ...

வற்றில் ஏற்றப்பட்டனர்.

தகவல் அறிந்து அம்பாறை மாவட்ட அபிவிருத்திச்சபை முன்னாள் உறுப்பினர் திரு கா. வேல்முருகு காரைதீவுக்கு விரைந்தார்.

கிராமமே சோகமயத்தில் ஆழ்ந்து இருந்தது இச்சம்பவத்தை திரு. வேல்முருகு தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம், இ. தொ. கா. பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, சம்மாந்துறை எம். பியும் பிரதி அமைச்சருமான ஜனாப். எம். ஏ. அப்துல் மஜீத் ஆகியோருக்கு அறிவித்தார்.

இதனிடையில் விசாரணைக்குக் கொண்டு செல்லப்பட்ட இளைஞர்களின் பெற்றோர்கள் இன்று (சனிக்கிழமை) களுவாஞ்சிக்குடி முகாமுக்கு வரும்படி கேட்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

## சமுதாய...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு "கானல்", "தண்ணீர்" ஆகிய நாவல்களை எழுதி முடித்துள்ளார். அதே காலத்தில் சிறுகதைகளையும் குறுநாவல்களையும் எழுதியுள்ளார் கண் சிகிச்சை செய்தபின் தமிழ் நாட்டில் இருந்தபோது "கானல்" நாவலையும் "தண்ணீர்" நாவலையும் வெளியிடப் பாடுபட்டார்.

டானியல் மரணத்தை வென்றதோர் இலக்கிய வாதியாவார்,

## வீட்டிற்குள் ....

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துக்குச் சமீபமாக உள்ள ஒரு வீட்டில் நடந்ததாக அறியவந்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை பிற்பகல் சுமார் 2-30 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது கொலையுண்டவர் 38 வயதுடையவர் ஓர் அரசாங்க ஊழியர்.

சுட்டுக் கொலை செய்த பின்னர் அரச ஊழியரின் சடலம் இழுத்து வரப்பட்டுச் சந்தி ஒன்றில் போடப்பட்டது.

## குடாநாட் ....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக்குவது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக விஷயம் அறிந்த வட்டாரங்களில் பேசப்படுகிறது.

இந்த ரோந்து நடவடிக்கைகள் தருணம் பார்த்து ஆரம்பிக்கப்படலாம் என்றும் அதே வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

## கன்னியா . . .

சிப்பாய்கள் வீதி அருகில் நடந்து வர, 8 சிப்பாய்களுடன் கவசவாகனம் மெதுவாக ஊர்ந்து வந்து கொண்டு இருந்தது

கன்னியா வெந்நீரூற்றுக்குச் செல்லும் சந்தியை அண்மியதும் பலத்த வெடிச்சத்தம் கேட்டது

கவச வாகனம் மேலே தூக்கி எறியப்பட்டது

5 சிப்பாய்கள் அந்த இடத்திலேயே மரணமானார்கள். 3 சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

நடந்து வந்த சிப்பாய்கள் சிதறி ஓடினார்கள்.

அதன் பின்னர் ஆயுதப்படையினர் ஹெலிகொப்டரில் சென்று அப்பிரதேசத்தைச் சுற்றி வானத்தில் இருந்து சுட்டனர்.

இறந்தவர்களின் [illegible] லங்கள் கடற்படை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டன காயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்டரில் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர்.

பதில் நீதிவான் பி. ரங்கநாதன் மரணவிசாரணை நடத்தினார். இறந்தவர்கள் பெயர்கள் வருமாறு:

சொலமன், பிடிஸ்ஸ, விஜிதா, செனவிரத்ன, ரணவீரா.

## பண்டாரி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரி விடுமுறையில் சென்றுள்ளார்.

அவர் மார்ச் 31 உடன் ஓய்வு பெற இருப்பது தெரிந்ததே.

[illegible]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,
நிகழும் குரோதன வருடம் பங்குனித் திங்கள் 23ஆம் நாள் (5-4-1986) சனிக்கிழமை பகல் 10-45 மணி முதல் 12-45 மணி வரையுள்ள மீனலக்கின சுபமுகூர்த்தத்தில்

| எமது புதல்வன் | | எனது புதல்வி |
|---|---|---|
| திருநிறை செல்வன் | ★★ | திருநிறை செல்வி |
| இராஜகுலசிங்கம் (பாபு) (University of Bremen-West Germany) | ★★ | மணிமேகலை (சசி) |
| அவர்களுக்கும் | ★★ | அவர்களுக்கும் |

திருவருள் நலத்தால் மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்களும் தங்கள் சுற்றமும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புரிமைகொண்டு அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. வே. கந்தையாவும் பாரியாரும்,
221/3, கனகசபை அவெனியூ, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

திரு. சி. மார்க்கண்டுவும் புதல்வர்களும்
77, பாரதி வீதி, கண்டுகுளி, யாழ்ப்பாணம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 29 03-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org